விலை: 30.00
பக்கங்கள் : 12+12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 084 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 29 ஞாயிற்றுக்கிழமை (13.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## பாணைக்கூட உண்ணமுடியாத நிலையில் சாதாரண மக்கள்

### அரசு ஆட்சியை விட்டுச் செல்ல வேண்டும் எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார



(கொழும்பு)
எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு இல்லாமையால் ஒட்டு மொத்த நாடும் செயலிழந்துள்ளது. இந்நிலையில் நாட்டை தொடர்ந்து கொண்டுசெல்ல அரசாங்கத்தால் முடியாது. அதனால் அரசாங்கம் ஆட்சியை கைவிட்டுச் செல்ல வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.
11

## "ஈழ மக்களுக்கு எதிரான சுமந்திரனே திரும்பிப் போ"

### தமிழகத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்


(11 ஆம் பக்கம் பார்க்க)

### 850 ரூபாயினால்

## சிலிண்டர் விலையை அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)
12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலையை 850 ரூபாயினால் அதிகரிக்குமாறு லிட்ரோ எரிவாயு நிறுவனம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, லிட்ரோ நிறுவனம் நேற்று நாட்டின் பல பகுதிகளுக்கு எரிவாயு சிலிண்டரை விநியோகித்தது.

இருப்பினும், சில பகுதிகளில் எரிவாயு சிலிண்டர் வாங்க வந்த வாடிக்
11

### வாழ்க்கைச் செலவைத் தாங்கமுடியாமல்

# மக்கள் கிளர்ச்சிக்கு தயாராகி வருகின்றனர்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால எச்சரிக்கை



(கொழும்பு)

**அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவை தாங்கமுடியாமல் மக்கள் கிளர்ச்சிக்கு தயாராகி வருகின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.**

எரிபொருள் விலை யேற்றத்துடன் நாடு மற்றுமொரு பேரழிவை எதிர்கொண்டுள்ளது எனவும் தனது பேஸ்புக் பக்கத்தில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

லங்கா ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 55 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 176 ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோன்று ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 77 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டு 254 ரூபாயாகியுள்ளது.

எரிபொருள் விலை யேற்றத்தைத் தொடர்ந்து அனைத்துப் பொருட்களும் கிடுகிடுவென உயர்ந்து வரும் நிலையிலேயே வாழ்க்
11

### அடுத்த வாரம்

## இந்தியா செல்கிறார் நிதி அமைச்சர் பசில்

(கொழும்பு)
நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச அடுத்தவாரம் இந்தியா செல்லவுள்ளார்.

இந்தப் பயணத்தை இலங்கைக்கான இந்தியத் தூதரகம் உறுதி செய்துள்ளது.

இலங்கை நிதி அமைச்சரை இந்தியாவிற்கு வரவேற்பதற்கு ஆவலுடன் காத்திருக்கின்றோம். இந்தியா - இலங்கை இடையிலான பொருளாதார பங்குடைமையை மேலும் வலுவாக்குவதற்கான தற்போதைய முயற்சிகளை அவரது
11

## பேருந்து கட்டணங்களை உயர்த்தும் எண்ணம் இல்லை

### போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம



(கொழும்பு)
எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், பேருந்துக் கட்டணங்களை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என போக்
11

### தரம் 5 புலமைப்பரிசில்

## பரீட்சை பெறுபேறு இன்று வெளியாகும்

(கொழும்பு)
2021ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை இன்று வெளியிடுமாறு பரீட்சை ஆணையாள
11

### மின் கட்டணத்தை

## அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)
எரிபொருள் விலையேற்றத்தை தொடர்ந்து மின்கட்டணத்தை அதிகரிக்க அனுமதி வழங்
11

## மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும்

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)
கூடிய விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடக்கும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களைப் பிரதமர் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது
11

## இலவச செயற்கை கால் பொருத்தும் முகாம் இன்று

10 ஆம் பக்கம் பார்க்க

## பொன் அணிகளின் போர் சென். பற்றிக்ஸ் வெற்றி


(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரத்தில் ஏ9 வீதி, ஸ்ரேசன் றோட் சந்தியிலிருந்து 25 மீற்றர் (80 அடி) தூரத்தில் சாவகச்சேரி இலங்கை வங்கிக்கு மேற்குப் புறமாக ஸ்ரேசன் றோட்டில் 4 பரப்புக் காணி நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் சுற்றிவர மதிலுடன் உடன் விற்பனைக்குண்டு.

(10607)

**074 243 1789**
**075 200 4209**
**077 416 2296**

## மணமகள் தேவை

1979.02.07 இல் பிறந்த 5' 6" உயரமுடைய சைவ உயர்குல மிருகசீரிடம், 2ஆம் பாதம், கிரக பாவம் 6 உடைய மணமகனுக்கு அழகிய பொருத்தமான மணமகள் தேவை.

(10615)

தொடர்பு:-

**077 330 1798**

# 347 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 347 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக அரசாங்க தகவல் திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 655, 730 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## வேலை வாய்ப்பு

சாவகச்சேரி மற்றும் மருதனார்மடம் அலுவலகத்தில் உள்ள அனைத்து வேலைகளையும் செய்வதற்கு அலுவலக உதவியாளர் தேவை.

**பெண்கள் மட்டும்**
**தகைமை - O/L, A/L**
**வயது - 20-30 வரை**

இப்பிரதேசத்திற்கு அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. **077 482 4473**

(10606)

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள, பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனை உதவியாளர்கள் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுநரும் உடன் தேவை.

தொடர்புக்கு

**077 748 8093**

(10617)

## கார் / வான் வாடகைக்கு தேவை

கார்கள் / வான்கள் மாதாந்த நீண்டகால குத்தகைக்கு சாரதி இல்லாமல் தேவை.

தொடர்பு:

**075 090 6486**

(10615)

Government TVEC Approved



## தாதியர் பயிற்சிப் பாடசாலை
## FLORENCE NIGHHTINGAL

## தாதியப் பயிற்சிநெறி - 2022

### நுழைவுத் தகைமை

- ◈ க.பொ.த சாதாரண தரம் குறைந்தது 5 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல்.
- ◈ விண்ணப்பதாரி 16 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்.
- ◈ பயிற்சிக்கால எல்லை 1 வருடம் (பகுதி நேரம்)
- ◈ பயிற்சி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
- ◈ தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்.

### கற்கை நிலையங்கள்



- ◉ மருதனார்மடம்
- ◉ நெல்லியடி
- ◉ சாவகச்சேரி

விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ள வேண்டிய இலக்கங்கள்

Viber - **077 718 6438,**
Whatsapp - **077 482 4473**
T.P. No - **077 718 6438**

நிர்வாகம்
புளோரன்ஸ் நைற்றிங்கேல்
தாதியர் பயிற்சிப் பாடசாலை

(10605)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்

## யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

### மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

*கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling*
*அழகுக் கலை*, Facials, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல் போன்ற பயிற்சிகள்...



இம்முறைA/L பரீட்சைக்கு தோற்றிய மாணவியருக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 16-03-2022 புதன்
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 20-03-2022 ஞாயிறு

(C-3952)

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-



## கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை பொதுச்சபை உறுப்பினர்களின் பார்வைக்காக

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 2021.01.01 முதல் 2021.12.31 வரையான காலத்திற்குரிய கணக்காய்வு செய்யப்பட்ட கணக் கறிக்கை ஆலய காரியாலயத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இக் கணக்கறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய / நீக்கப்பட வேண்டிய விடயங்கள் இருப்பின் எழுத்துமூலம் 2022.03.27ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 11.30 மணிக்கு முன் ஆலய காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

*நன்றி*

ஆலய பரிபாலன சபை சார்பில்

| ச.ஸ்ரீகௌரிபாலா<br>தலைவர் | மா.சிவராசா<br>செயலாளர் | சு.வரதராசா<br>பொருளாளர் |
|---|---|---|

(C-3959)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பௌதிகவியல் பாட ஆசிரியர் திரு. **சரத் சந்திரன்** அவர்களின் தந்தையார்

## K.M.செல்வரத்தினம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(C-3958)

# துயர் பகிர்கின்றோம்

எமது நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர்
திரு. **இரத்தினம் சாந்தகுமார்** அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி இரத்தினம் மாரிமுத்து



அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(10609)

**நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம், தெல்லிப்பளை.**

குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

## மனவளக்கலை யோகப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம்
**அறிவுத்திருக்கோவில் அன்பர்களுக்கோர் இனிய செய்தி...!**

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

என்று பாரதி இயம்பியமைக்கு அமைய அதனிலும் மேலான உலகப் பெருநிதி அறுபத்தைந்தாம் கலையாகிய 'மனவளக்கலையை'

## இந்த ஆண்டு முழுவதும் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில்

- ◉ முதற்கட்ட 7 நாட்கள் கொண்ட உடற்பயிற்சி காயகல்ப்பம்
- ◉ அடுத்துவரும் அகத்தாய்வு 1... 2... 3... பயிற்சிகளுக்கும்

**அன்னை பார்வதி அறக்கட்டளையை சார்ந்த அன்பர்கள் பெருமனம்கொண்டு அனுசரணை வழங்க திருவுளம் கொண்டுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதில் பேருவகை கொண்டுள்ளோம்.**

எனவே பயிற்சியாளர்கள் கட்டணமேதுமின்றி பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- ◈ உடல்நலத்திற்கு → எளிய முறை உடற்பயிற்சி
- ◈ உயிர்வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- ◈ மன அமைதிக்கு → தியான பயிற்சிகள்
- ◈ அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- ◈ உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம்:- 12.03.2022 சனிக்கிழமை
நேரம்:- மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை
பயிற்சியை வழங்குபவர்:-
துணைப் பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன்,
துணைப் பேராசிரியர் ந.ஜெயகிருஷ்ணா மற்றும்
அருள்நிதி க.தவமணிதாசன், அருள்நிதி த.சிவகாமி,
அருள்நிதி க.ஜெயராணி

(C-3957)


*வருக வருக! நலம் பெருக! பெறுக!*
வாழ்க வையகம் ; வாழ்க வளமுடன்

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
இல.81, பிறவுன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
**021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் மனங்களை அரசால் வெல்ல முடியவில்லை

## அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கையை பொறுத்த வரையில் பொருளாதார ரீதியாக மட்டும் அல்ல அரசியல் ரீதியிலும் ஸ்திரமற்ற நிலைமையே காணப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல்கள் பிற்போடப்படுவதால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஆளுநரின் கீழ் இயங்குகின்றது. இது மிக மோசமான செயற்பாடாகும். பல ஆண்டுகளாக இவ்வாறான நிலைமை காணப்படுகின்றது. இது நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மையின் போதும் சர்வதேச தலையீடுகளைக் கொண்டு நாடு துண்டாடப்படும் நிலைமையை உருவாக்கும்.

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை தோற்கடித்த பின்னர் அபிவிருத்தி குறித்து சிந்தித்தை தவிர வேறு எந்தவொரு வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை.

மத்திய அரசாங்கத்தினால் முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் வடக்கு மக்கள் மனங்களில் சென்றடையவில்லை.

அதற்கு மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. உதாரணமாக காணிப் பங்கீட்டின் போதும் நிலங்களை இழந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை.

இன்றும் வடக்கில் மிகப் பாரிய அளவில் பொருளாதார நெருக்கடி நிலையொன்று காணப்படுகின்றது. இலங்கையில் ஏனைய பகுதிகளிலும் இந்த நிலை காணப்பட்டாலும் கூட வடக்கை தனியாக அடையாளப்படுத்தி அதிலும் இனவாத பிரசாரங்களை செய்ய அதிக வாய்ப்புகள் உள்ளன.

எனவே இவ்வாறான நிலைமைகள் உருவாக முன்னர் துரித நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் செயற்பட வேண்டும் என அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார். (நி)

# சர்வதேச நாணய நிதியத்துடன் பேசத் தயாராகும் இலங்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் அடுத்த மாதம் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இலங்கை தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரிகளிடம் இலங்கையின் பிரேரணையை கையளிப்பதற்காக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வோஷிங்டன் செல்ல உள்ளார்.

இந்த விஜயம் ஏப்ரல் நடுப்பகுதியில் இடம்பெறும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)



யாழ்ப்பாணம் - கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலி நிகழ்வு நேற்று காலை யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடமாகாண கடற்படை தளபதி பிரியந்த பெரேரா, ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதி அட்மிரல் விஜேகுணரட்ண, யாழிற்கான இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் பளிகக்கார, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கே.விமலநாதன், நெடுந்தீவு பிரதேச செயலர் சத்தியசோதி மற்றும் மதகுருமார்கள், கடற்படை இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பக்தர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.


(படங்கள்- சிவசாந்தன்,ரவிசாந்)

# மரண அறிவித்தல்

## அந்தோனியப்பு சில்வேஸ்ரர்

(பெரியவன் அண்ணாவியார்)

தோற்றம் -04.01.1952
மறைவு -08.03.2022



பாஷையூரைப் பிறப்பிடமாகவும், கனடா (Montreal) ஐ வதிவிடமாகவும் கொண்ட அந்தோனியப்பு சில்வேஸ்ரர் அவர்கள் 08.03.2022 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கபிரியேல் அந்தோனியப்பு-மாட்டினம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற கபிரியேல் ஞானப்பிரகாசம்-அந்தோனியம்மா (பூமணி) தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிசிலியா (பொன்மலர்) அவர்களின் பாசமிகு கணவரும், றொறிங்ஸ்ரன் (உதயராஜ்-கனடா), றொறிங்ஸ்றெலா (உதயநிலா-பாஷையூர்), எலிங்ரன் (ஜெயராஜ்-லண்டன்), அன்ரன் திலகராஜ் (கனடா), பெனிஸ்றெலா (சர்மிலா-கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றஜி (கனடா), நியூட்டன், (பாஷையூர்), நிரோசி (லண்டன்), சுபிதா (கனடா), வின்சன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பெவிற்ரா (பிரான்ஸ்), றெச்சீஸ் (பாஷையூர்), பற்றிமா (பாஷையூர்), ஜான்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அலெக்ஸ், ஆம்ஸ்ரன், அரிஸ், ஸ்ரெபான், ஸ்ரெனோ, ஜெனுசன், ஜெத்றோ, ஜேடன், சமினா, அக்ஷயன், அபிஷயன், ஆர்ஷயன் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி-3950)

மகள்-நி.உதயநிலா (றொறிங்ஸ்றெலா)
077 165 8567

சென்.அன்ரனிஸ் வீதி,
பாஷையூர்.

IELTS CLASSES
கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, $A_1$ UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH
- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK $A_1$ Exam.
- Exam Registration center.

$A_1$ uk Exam
IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
(10243)
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.
TP: 077 780 3970, 074 007 1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J.D.C.A இருபது-20 சம்பியன் வெற்றிக் கிண்ணம்

## இன்று ஆரம்பம்

J.D.C.A இருபது-20 சம்பியன் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் இத்தொடரில் 24 கழகங்கள் பங்குபற்றுகின்றன. இவற்றை 1 பிரிவில் 3 கழகங்களைக் கொண்டு 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

பிரிவு A யில் ஸ்கந்தாஸ்ரார், யூனியன்ஸ், யாழ். பல்கலைக்கழகம், பிரிவு B யில் யாழ். சென்றல், விக்ரோறியன்ஸ், ஜொலிஸ்ரார் பிரிவு C யில் ஹாட்லியையிற்ஸ், ஓல்ட்கோல்ஸ், விங்ஸ், பிரிவு D யில் றெஜின்போ, சென்றலைட்ஸ், கிறாஸ்கொப்பர்ஸ், பிரிவு E இல் டிறைற்றோன், AB, மூளாய் விக்டோறி. பிரிவு C இல் மானிப்பாய் பரீஸ், டிறிபேக்ஸ்ரார், அரியாலை சென்றல் பிரிவு G இல்கே.சி.சி.சி.யாழ். ஜொனியன்ஸ், ஸ்ரான்லி. பிரிவு H இல் பற்றீசியன்ஸ், T.YMHA, T.C.C.

ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு அணி தெரிவு செய்யப்படும். A பிரிவில் முதலாவது அணியும் B பிரிவில் முதலாவது அணியும் முதலாவது கால் இறுதிப் போட்டியிலும் C பிரிவில் முதலாவது அணியும் D பிரிவில் முதலாவது அணியும் இரண்டாவது கால் இறுதிப் போட்டியிலும் E பிரிவில் முதலாவது அணியும் F பிரிவில் முதலாவது அணியும் 3 ஆவது கால் இறுதிப் போட்டியிலும், பிரிவு G இல் முதலாவது அணியும், பிரிவு H இல் முதலாவது அணியும் 4 ஆவது கால் இறுதிப் போட்டியில் கலந்து கொள்வர்.

முதலாவது கால் இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி, 2 ஆவது கால் இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் முதலாவது அரை இறுதிப் போட்டியிலும் 3 ஆவது கால் இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி 4 ஆவது கால் இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் 2 ஆவது அரை இறுதிப் போட்டியில் கலந்து கொள்வர்.

முதலாவது அரை இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி 2 ஆவது அரை இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் இறுதிப் போட்டியில் கலந்து கொள்வர். போட்டிகள் யாவும் இன்று சனிக்கிழமை ஸ்கந்தவரோதயா கல்லூரி, விக்டோறியா கல்லூரி மைதானத்திலும் ஆரம்பமாகவுள்ளன.

ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் காலை விக்டோறியன்ஸ் அணிக்கும் ஜொலிஸ்ரார்ஸ் அணிக்கும் பிற்பகல் ஸ்கந்தாஸ்ரார் அணிக்கும், யூனியன்ஸ் அணிக்கும் நடைபெறவுள்ளது.

சுழிபுரம் விக்டோறியாக கல்லூரி மைதானத்தில் காலை AB அணிக்கும் டிறைற்றோன் அணிக்கும் பிற்பகல் லிங்ஸ் அணிக்கும் ஹாட்லியையிற்ஸ் அணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர் A.S நிஷாந்தனும் சுற்றுப் போட்டிக்குழு தலைவர் கே.செல்வராசாவும் செயலாளர் லவேந்திரா ஆகியோர் தொடரினை நெறிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (4)

# குளிர்கால ஒலிம்பிக் சீனா ஆதிக்கம்




சீனாவில் நடைபெற்று வரும் குளிர்கால ஒலிம்பிக் தொடரில், சீனா தொடர்ந்தும் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

11 தங்கப் பதக்கங்கள், 10 வெண்கலப் பதக்கங்கள், 15 வெள்ளிப் பதக்கங்களுடன் மொத்தமாக 36 பதக்கங்களுடன் சீனா முதலிடத்தில் நீடிக்கின்றது.

7 தங்கப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள், 7 வெள்ளிப் பதக்கங்களுடன் மொத்தமாக 16 பதக்கங்களுடன் கனடா இரண்டாவது இடத்தில் உள்ளது.

6 தங்கப் பதக்கங்கள், 9 வெண்கலப் பதக்கங்கள், 5 வெள்ளிப் பதக்கங்களுடன் மொத்தமாக 20 பதக்கங்களுடன் உக்ரைன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

4 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 9 பதக்கங்களுடன் ஒஸ்திரியா நான்காவது இடத்தில் உள்ளது.

4 தங்கப் பதக்கங்கள், 1 வெண்கலப் பதக்கம், 2 வெள்ளிப் பதக்கங்களுடன் மொத்தமாக 7 பதக்கங்களுடன் பிரான்ஸ் ஐந்தாவது இடத்தில் உள்ளது.

அமெரிக்கா, நோர்வே, ஜப்பான், ஸ்லோவாக்கியா, ஜேர்மனி ஆகிய நாடுகள் முறையே ஆறு முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ளன. (4-6)

# ராஜஸ்தான் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக மலிங்க



ஐ.பி.எல் தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சு பயிற்சியாளராக இலங்கை ஜாம்பவான் லசித் மலிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

2022 ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்நிலையில் பல ஆண்டுகளாக மும்பை இந்தியன்ஸ் அணியுடன் இணைந்து செயற்பட்ட இலங்கை ஜாம்பவான் லசித் மலிங்க இந்தாண்டு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் வேகப் பந்துவீச்சு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து ராஜஸ்தான் அணியின் நிறமான பிங்க் நிற உடையுடன் மலிங்க இருக்கும் புகைப்படத்தை அணி நிர்வாகம் டுவிட்டரில் வெளியிட்டுள்ளது. மேலும் மலிங்க தான் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் வேகப்பந்துவீச்சு பயிற்சியாளர் என தெரிவித்துள்ளது.

பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள மலிங்கவின் பதிவில், மீண்டும் ஐ.பி.எல்லுக்கு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சு பயிற்சியாளராக திரும்பியுள்ளேன் என பதிவிட்டுள்ளார்.

மலிங்க மீண்டும் ஐ.பி.எல்லுக்கு பயிற்சியாளராக திரும்பியுள்ளது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுத்துள்ளது. (4-6)

# ஆடுகளத்தன்மையை ஆராய்ந்து அணி வீரர்களை முடிவு செய்வோம்

## துணை கப்டன் பும்ரா



ஆடுகளத்தன்மையை முழுமையாக ஆராய்ந்து அதற்கு ஏற்ப எமது 11 பேர் கொண்ட அணியை முடிவு செய்வோம் என இந்திய அணியின் துணைத்தலைவர் பும்ரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து பும்ரா கூறுகையில், சிவப்பு நிறப் பந்து டெஸ்ட் கிரிக்கெட் (பகல்-இரவு) போட்டியில் எத்தகைய அணுகுமுறை தேவை என்பதில் இன்னும் நாங்கள் கற்றுக்கொண்டு தான் இருக்கிறோம்.

தொழில்முறை கிரிக்கெட் வீரர்கள் என்ற முறையில் முடிந்த வரை சூழலுக்கு தக்கபடி நம்மை சீக்கிரம் வடிவமைத்துக் கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

களத்தடுப்பின் போது சிவப்பு நிறப் பந்து வித்தியாசமாக தோன்றும். நாங்கள் நினைத்ததை விட பந்து வேகமாக கைக்கு வந்து விடும்.

வழக்கமான டெஸ்ட் போட்டியில் காலையில் பந்து அதிகமாக 'ஸ்விங்' ஆகும், ஆனால் பகல்-இரவு டெஸ்ட் பிற்பகலில் தொடங்குவதால் அந்த சமயத்தில் பந்து பெரிய அளவில் 'ஸ்விங்' ஆகாது.

ஆனால் மாலைப்பொழுதில் பந்தை நன்கு 'ஸ்விங்' செய்ய முடியும். இது போன்ற விடயங்கள் குறித்து நாங்கள் ஆலோசித்து இருக்கிறோம்.

நாங்கள் அதிகமான சிவப்பு நிறப் பந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடியதில்லை. இதுவரை எதிர்கொண்ட 3 போட்டிகளையும் வெவ்வேறு விதமான சீதோஷ்ண நிலையில் விளையாடி இருக்கிறோம்.

எனவே இத்தகைய போட்டிக்கு, இந்த மாதிரித் தான் நம்மை மாற்றிக் கொண்டு தயாராக வேண்டும் என்று குறிப்பிட்ட எந்த அளவுகோலும் வைக்க முடியாது.

இதுவரை கிடைத்துள்ள அனுபவங்களை பகிர்ந்து அதற்கு ஏற்ப திட்டங்களை வகுக்க முயற்சிக்கிறோம். ஆடுகளத்தன்மையை முழுமையாக ஆராய்ந்து அதற்கு ஏற்ப ஆடும் எமது 11 பேர் கொண்ட அணியை முடிவு செய்வோம் என தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் 50 ஆவது ஆண்டு விழா நேற்று சனிக்கிழமை வங்கி முகாமையாளர் அ.கங்காதரன் தலைமையில் நடைபெற்றது.இதன்போது பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி மூலமாக பயனாளிகளுக்கு கரவெட்டி கமநல திணைக்களத்தின் ஊடாக சேதனப் பசளை மற்றும் பயன்தரும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (படம்- மகாலிங்கம்)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் யாழ்.பிராந்திய வாலிபர் பணியின் ஏற்பாட்டில் வருடாந்த இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை கைதடி-மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள மருதனார்மடம் இறையியல் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

---

(நெளுக்குளம்)

வவுனியா பூந்தோட்டம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இரத்ததானம் இன்று நடைபெறவுள்ளது. உதிரம் கொடுப்போம் உயிர்களை காப்போம் என்ற தொனிப்பொருளில் பூந்தோட்டம் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் காலை 8.45 தொடக்கம் மாலை 2.45 வரை இடம்பெறவுள்ளது. (4-6-299)




அமெரிக்காவின் நியூஜெசியைத் தளமாக கொண்டு செயற்படும் புலம்பெயர்ந்தவர்களின் கல்வி, புத்தாக்கம், தலைமைத்துவம், சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் பாகிஸ்தானில் இடம்பெற்ற சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் பங்கு கொண்டு தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்த முல்லைத்தீவு யுவதியான இந்துகாதேவி கணேஷைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை திருநெல்வேலியில் அமைந்துள்ள இந்து வாலிபர்சங்கமண்டபத்தில் இடம்பெற்றது.இதன்போது இந்துகாதேவிக்குப் இரண்டு இலட்சம் ரூபா காசோலை வழங்கி வைக்கப்பட்டது. (படம்- ரவிசாந்)

## ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியின் 50 வது ஆண்டு வருட நிறைவு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு வங்கியின் பிரதான கிளையில் நடைபெறவுள்ளது என முகாமையாளர் எஸ்.தனீஸ்வரன் அறிவித்துள்ளார். (4)

# மரண அறிவித்தல்

அமரர். **சின்னத்துரை சிறிஸ்கந்தராஜா**



ஸ்ரான்லிக் கல்லூரி வீதி கச்சேரி கிழக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிறிஸ்கந்தராஜா (ஓய்வு பெற்ற தபால் ஊழியர்) அவர்கள் 09.03.2022 புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-இரத்தினம் அவர்களின் கனிஸ்ட புத்திரனும் காலஞ்சென்ற இராமலிங்கம்-இராசம்மா அவர்களின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நவரட்ணராஜா (ஓய்வு பெற்ற R.M.P) மற்றும் சண்முகராஜா (ஓய்வு பெற்ற கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்) அவர்களின் சகோதரனும், நீலாம்பிகை(கனடா) யோகராணி, ஆகியோரின் மைத்துனரும் காந்தறூபன்(லண்டன்), சாந்தறூபன் (லண்டன்) வசந்தறூபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும். மகிந்தா (லண்டன்), தர்சிகா (லண்டன்), பிரியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிக்ஷா, மர்ஷா, கஸ்மிகா, அஸ்விக், அக்ஷயன் அனனியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.03.2022 ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (10604)

இல.08, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.
T.P- 021 222 9031

தகவல்-
குடும்பத்தினர்

# இராசிபலன்

13.03.2022
மாசி 29, ஞாயிற்றுக்கிழமை
தசமி முற்பகல் 10.10 மணிவரை

புநர்பூசம் முன்னிரவு 7.50 மணிவரை
சுபநேரம்- 9.22-10.52 மணிவரை
இராகுகாலம் -4.52-6.22 மணிவரை

சந்திராஷ்டமம்
கேட்டை,மூலம்

வளவன்

**மேஷம்** கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக நடை பெறலாம்,பயணத்தால் பலனுண்டு.

**துலாம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், நினைத்த காரியத்தை எளிதில் நிறை வேற்றுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்** தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாடு குதூகலம் தரும்.

**சிம்மம்** உறவினர்களைக்காண பயணமொன்று இடம் பெறலாம், சுப விரயங்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள், சயனசுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** கரைந்த சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், நிலையான வருமானத்திற்கு வழி சமைப்பீர்கள்.

**கன்னி** சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும் ,கௌரவமான நாள்.

**தனுசு** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், மனத்தில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்** பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெரிய மனிதர் சந்திப்பு இடம் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் உள்ளம் அழுக்கடைந்தால் உன் உடலும், நாவும் கூட அழுக்காகிவிடும்.

# மின் துண்டிப்பு தொடர்பில் நிதி அமைச்சரின் அறிவிப்பை மீள் பரிசீலனை செய்யுங்கள்

## ஆளுநரிடம் மாநகர பிரதி முதல்வர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப் பகுதிகளில் மின்சார சிக்கனம் என்ற போர்வையில் மின் துண்டிப்பை மேற்கொள்வதை வடக்கு மாகாண ஆளுநர் மீள்பரிசீலனை செய்யவேண்டும் என யாழ் மாநகர பிரதி முதல்வர் துரைராசா ஈசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ் மாநகர சபையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் உள்ளூராட்சி மன்றங்களில் மின்சார சிக்கனத்தை பேணுமாறு சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது. இதனை வலியுறுத்தி வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உள்ளூராட்சி மன்றங்களுக்கு வீதி மின்விளக்குகளின் மின்சார சிக்கனத்தை பேணுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ் நகரப் பகுதிகளில் ஐந்துக்கு மேற்பட்ட எரிபொருள் நிலையங்கள் மற்றும் மொத்த வியாபார வர்த்தக நிலையங்கள் காணப்படுகின்ற நிலையில் மக்கள் இரவு நேரங்களில் நடமாட்டம் அதிகரித்துள்ளது. ஏனெனில் எரிபொருளுக்காக மக்கள் இரவு நேரங்களில் எரிபொருள் நிலையங்களில் காத்திருக்கின்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான நிலையில் வீதி மின் விளக்குகளை அணைக்கும்போது வீதி விபத்துக்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுவதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்துகிறது.

யாழ் நகரப் பகுதிகளில் பல மின் விளக்குகள் துண்டிக்கப்பட்டதாக அறியக் கிடைக்கும் நிலையில் அதனை மீள பொருத்துவதற்கு வடமாகாண ஆளுநர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்க வேண்டும். ஆகவே குறித்த விடயம் தொடர்பில் வட மாகாண ஆளுநருக்கு எழுத்து மூலமான கடிதம் ஒன்றை அனுப்புவதற்கு தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-33)

## மணல் கொள்ளை சாரதிகள் கைது

(சாவகச்சேரி)

உரிய அனுமதியின்றி மணல் ஏற்றிச் சென்ற மூன்று டிப்பர் வாகனங்கள் கொடிகாமப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மூன்று டிப்பர் வாகனங்கள் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கம், பருத்தித்துறை மாவட்ட சாரண கிளைச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும் என சங்கத்தின் தலைவர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (4)

# வடமராட்சியில் விபத்து அறுவர் மருத்துவமனையில்



(கரணவாய்)

வடமராட்சி மாலிசந்தி சதாப் பொன்சுக்கு அண்மித்த பகுதியில் இடம் பெற்ற விபத்தில் அறுவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை நோக்கி சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டியும், நெல் லியடி நோக்கி கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் அறுவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் தனது இரண்டு பிள்ளைகளையும் பாடசாலையிலிருந்து ஏற்றிவந்த போதே குறித்த விபத்தில் சிக்கியுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (4-6-60)


# கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஈச்சமோட்டைப் பகுதியில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு கடந்த 10 ஆம் திகதி பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டது.

வீதியின் அருகே குழாய் நீர் பொருத்தும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஊழியர்கள் கிடங்கு தோண்டிய போது சந்தேகத்துக்கிடமான பொருள் இருப்பதை அவதானித்தனர்.

உடனடியாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, குறித்த இடத்தை பார்வையிட்ட பொலிஸார் கைக்குண்டு என்பதை



உறுதி செய்ததுடன், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை வரவழைத்து குறித்த குண்டை மீட்டனர். (4-6-33)

# ஹெரோயினுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊர்காவற்றுறை மக்கள் வங்கி பகுதியைச்சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் 1020 மில்லிக்கிராம் ஹெரோயினுடன் கடந்த 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து இக்கைது நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸாரின் மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தியவேளை அவரை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (4-6-103)

# அராலியில் மோதல் மூவர் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் அராலி பகுதியில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் மூவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குடும்பத்தகராறு காரணமாக இவ் மோதல் சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய் துள்ளனர். (4-6-104)

# நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைச் செயற்பாட்டாளரும், சமூக நீதி ஆர்வலருமான ஒற்றிறெபேறாவின் நினைவுப் பேருரை நிகழ்வு சகவாழ்வுக்கான யாழ்ப்பாண மக்கள் ஒன்றியத்தினாரால் நாளை திங்கட்கிழமை 14 ஆம் திகதி மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி அருகாமையில் அமைந்திருக்கும் சென்ஜோன் தபப்டிஸ்ற் தேவாலயத்தின் பரிஷ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொவிட் 19 நெறிமுறைகளுக்கு அமைவாக இடம் பெறும் இந்நிகழ்விலே அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சகவாழ்வுக்கானயாழ்ப்பாண மக்களின் ஒன்றியத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (4)

# வினாவிடைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகம் நாவலர் ஆண்டினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு வினாவிடைப் போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டிக்கு பாடசாலை மாணவர்கள் அனைவரும் பங்குபற்றலாம். வினா விடைப் போட்டிக்குரிய வினா கொத்து படிவத்தை பெற்று வீடுகளுக்கு எடுத்துச்சென்று அனைத்து வினாக்களுக்கும் மிகத்தெளிவாக மாணவர்கள் சுயமாக அப்பத்திரத்திலேயே விடையெழுதி மீள ஒப்படைக்க வேண்டும்.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 31 ஆம் திகதியாகும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.144 (82) நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பி.ப 4 மணி முதல் மாலை 6 வரை அல்லது 021790 4790 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் பரீட்சைச் செயலர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிகள் தீவிரமடைந்தால் கோட்டாவும் பதவி விலகுவார்

## தப்புக் கணக்குப்போடுகிறார் பசில்

## அம்பலப்படுத்திய விமல் வீரவன்ச

(கொழும்பு)

நாட்டில் நெருக்கடிகள் தீவிரமடைந் துள்ள நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பதவி விலகுவார் என பசில் ராஜபக்ச கணக்கிட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். சிங்கள ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை அந்த சந்தர்ப்பத்தில் அரச ஆட்சியை தனது கையில் எடுப்பதற்கு வாய்ப்புகள் உள்ளதா எனவும் பசில் ராஜபக்ஷ யோசனை செய்து வருகின்றார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தற்போது சற்று செயலற்ற நிலையில் செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே பசில் ராஜபக்ஷவை விரட்டியத்தால் மாத்திரமே நாட்டின் தறபோதைய நிலைமையை தவிர்க்க முடியும். அதனை தவிர்த்து நாட்டை கட்டியெழுப்ப முடியாது.

எனினும்அது நினைக்கும் அளவிற்கு இலகுவான விடயமல்ல. பசில் என்பவர் அமெரிக்காவுக்காக வேலை செய்யும் ஒருவர் என விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார். (நி)


## தேவை

விற்பனை பிரதிநிதி (பெண்) அனுபவமுள்ளவர் தேவை.

**074 055 5922** (C-1653)

## தேவை

வீட்டு வேலை, மற்றும் முதியோர் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பாளர்கள் மலையகம், மற்றும் கொழும்பை அண்டியவர்கள் தேவை. வேலை அனுபவமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.


**074 055 5922** (C-1653)

## தேவை

முதியோர் பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைக்கு எம்மிடம் அனுபவம் உள்ளவர்கள் உள்ளனர் (கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம்)

**074 055 5922** (C-1653)

## தெய்வீக சுகமளிக்கும் ஜெய ஊழியம்



சகோ டேவிட் இராஜசிங்கம்
இலங்கை வந்துள்ளார்
13.03.2022 – நினைவு
அஞ்சலி திறப்புவிழா
இராஜேந்திரா ஆலயம் திறப்பு விழா

**13.03.2022 தொடக்கம் 04.04.2022 வரை ஜெய ஊழியங்கள் நடைபெறும்.**

தொடர்புகளுக்கு
சகோ.டேவிட் இராஜசிங்கம்
074 293 3249
கண்ணன் பாஸ்டர்
077 300 0970
குலேந்திரன் பாஸ்டர்
076 315 0127

ஏழாலை மேற்கு,
அசம்பிளி ஒப்கோட்.

(10603)

## மணமகள் தேவை

பிறப்பு :- 1982 இந்து கௌரவகுடும்பம்
நட்சத்திரம் :- கார்த்திகை
கி.பா:- 32 (உதயத்துச் செவ்வாய்)
உயரம் :- 5' 5"
தகைமை/தொழில் :- அச்சக உரிமையாளர்
எதிர்பார்ப்பு:- உள்நாட்டு மணமகள் தேவை
தொடர்புகளுக்கு :- **077 470 3521** (10572)

## Spoken English Classes
(Personal or Group)

3 மாதத்தில் சரளமாக ஆங்கிலம் பேச கற்பிக்கப்படும்.

**T.P - 077 948 5703**
**யாழ்ப்பாணம்.**

(10599)

## Vacancy (Accountant)

ஸ்ரான்லி வீதியில் அமைந்திருக்கும் வாகன உதிரிப்பாக விற்பனை நிறுவனத்திற்கு Accountant & Accounts Trainee தேவை Degree or Diploma in Accounts & A/L Commerce முடித்தோர் விரும்பத்தக்கது.

வயது எல்லை 19 - 35

தொடர்புகளுக்கு : (Mon-Sat 9am-6pm)
**Nst Motors Pvt Ltd**
**177B, 179 Stanley Road, Jaffna.**
**076 567 4930/021 221 4605/021 221 6887**
**Email: nstmotors stores@gmail.com**

(10602)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா:11 ½ சூரி,செவ் 10இல்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/3414 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா:38¾ சூரி6 செவ் 4இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:சாதாரணபடித்தஆண்<br>தொ.இ: G/12466 |
| பிறப்பு: 1978இந்து<br>நட்சத்திரம்:மூலம் 4<br>கி.பா: 20சூரி 10 செவ் 11இல்<br>உயரம்:176cm<br>தகைமை/தொழில்:பிரான்ஸ் (சிற்றிசன்)<br>எதிர்பார்ப்பு:சாதாரணபடித்தபெண்<br>தொ.இ: B/12405 | பிறப்பு:1995இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை 4<br>கி.பா:சூரி9செவ் 10இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:MLT<br>எதிர்பார்ப்பு: தகுதியானவரன் MLT இற்குமேல்<br>தொ.இ:G/12467 |
| பிறப்பு:1982இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் 4<br>கி.பா :01சூரி10 செவ் 1இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: கணனி வடிவமைப்பாளர்.<br>எதிர்பார்ப்பு : ஆசிரியை அல்லது தகுந்த வரன்<br>தொ.இ: B/12407 | பிறப்பு:1995இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: சூரி11செவ் 1 இல்<br>உயரம் :166 cm<br>தகைமை/தொழில்:கணக்காளர் (ஜேர்மன் சிற்றிசன்)<br>எதிர்பார்ப்பு: வேறுநாடுகளிலிருந்து ஜேர்மன் வரக்கூடியவர்கள்<br>தொ.இ: G/12468 |
| பிறப்பு:1994 கிறிஸ்தவம் Non RC<br>நட்சத்திரம்:பூனர்பூசம் 4<br>கி.பா:சூரி,செவ் 6இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை.:.தொழில்: BSC வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/12408 | பிறப்பு: 1995இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா:சூரி9செவ் 1இல்<br>உயரம்: 5'3"<br>தகைமைதொழில்:SoftwareEngineer<br>எதிர்பார்ப்பு: Engineer<br>தொ.இ:G/12470 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ[illegible]**
**சேவைக் கட்டணமாக ரூபா 500 அற[illegible]**


## இந்து பௌத்த கலாசார பேரவையில்
### சிங்களம் மற்றும் ஆங்கில மொழி புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

இந்து பௌத்த கலாசார பேரவையின் இர்ண்டாம் மொழி கற்கைநெறி நிலையங்களில் மார்ச் மாத நடுப்பகுதியில் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. வடக்கு மாகாணம் முழுவதிலும் A/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு விசேடமாக சிங்கள மொழியில் உயர் டிப்ளோமா (HNDS) சான்றிதழுக்கான கற்பித்தல் நடைபெறவுள்ளது. சகல மாவட்டங்களிலும் வார நாட்களில் காலை மற்றும் மாலை நேரங்களிலிலும் வகுப்புக்கள் நடைபெறும். சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளிலும் வகுப்புக்கள் நடைபெற உள்ளது. கீழ் காணும் அரச பாடசாலைகளிலும் தனியார் கட்டிடங்களிலும் நடைபெறும்.

முல்லைத்தீவு - கல்யாண வேலவர் அறநெறி பாடசாலை
வவுனியா - மன்னார் வீதி குருமன்காடு
யாழ்ப்பாணம் - ஆரியகுளம் உயர்கலைக்கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலயம்

| மாவட்டம் | பாடசாலை பெயர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| | யா/கொக்குவில் இந்து கல்லூரி | 0742167429 |
| | யா/மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி | 0761722176 |
| | யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி | 074 170 8970 |
| யாழ்ப்பாணம் | யா/ புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி | 0741708970 |
| | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 077 377 3058 |
| | யா/சுழிபுரம் விக்டோறியா கல்லூரி | 077 830 6336 |
| | யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் | 075 051 8980 |
| | யா/சண்டிலிப்பாய் இந்து கல்லூரி | 076 028 2693 |
| | யா/சாவகச்சேரி றிபேக் கல்லூரி | 076 6204 258 |
| | யா/உடுத்துறை மகா வித்தியாலயம் | 074 163 4306 |
| முல்லைத்தீவு | மு/வித்தியானந்தா கல்லூரி | 076 164 6608 |
| | மு/விசுவமடு மகாவித்தியாலயம் | 074 061 9321 |
| | கிளி/ கார்போனிய கல்லூரி | 076 6262884 |
| கிளிநொச்சி | கிளி/ பூநகரி மத்திய கல்லூரி | 077 5332 59 5 |
| | கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரி | 076 579 2237 |
| | கிளி/முருகானந்த கல்லூரி | 076 009 5143 |
| | கிளி/கருக்கை தீவு மகா வித்தியாலயம் | |
| | கிளி/நல்லூர் மகா வித்தியாலயம் | 077 393 5664 |
| வவுனியா | வ/தாண்டிக்குளம் பிரமண்டு மகா வித்தியாலயம் | 077 901 9814 |
| | V/C.C.T.M.S | 077 901 9814 |
| மன்னார் | மன்/புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை | 076 028 2693 |

**மேலதிக விபரங்களிற்கு,**
**தலைமைக்காரியாலயம்**
**இந்து பௌத்த கலாசார பேரவை,**
**இல: 09, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**076 028 2693**
**[illegible] 2072**

(C-3951)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் விடயத்தில்

# பல்முனைப்பட்ட அணுகுமுறையினை முன்னெடுக்க வேண்டும்

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை

(லண்டன்)

**தமிழர்கள் மீதான சிங்கள பௌத்த அரசின் கொடுங்குற்றங்களுக்கான பொறுப்புக் கூறலுக்கு வழிவகை செய்ய, பல்முனைப்பட்ட அணுகு முறையொன்றினை சர்வதேச சமூகம் முன்னெடுக்க வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கை தொடர்பிலான ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளர் பாஷேலே அம்மையாரின் அறிக்கை தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

"இராணுவ மயமாக்கல் மற்றும் இன-மதவாதத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகள் ஜனநாயக அமைப்புக்களை சிதைக்கின்றன" என்ற ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளரின் கூற்றினை சுட்டிக்காட்டியுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், இலங்கை அரசு, அதன் அரச கட்டமைப்புகள், அரச குழுமம் ஆகியன மியான்மர், ஈரான் நாடுகளில் இருப்பது போலவே மதவாத அடிப்படைவாதிகளின் பிடியில் சிக்கியிருப்பதாக தெரிவித்துள்ளதோடு, இந்த கட்டமைப்புக்கள் தமிழருக்கான நீதிக்கும், பொறுப்புக்கூறலுக்கும் முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன என தெரிவித்துள்ளது. "தண்டனைப் பயமின்மையானது இலங்கையின் கலாச்சாரத்தில் ஊறிப்போன ஒன்று என்பதோடு அதனது அரசியலில் சிங்கள பௌத்தமத இனவாதம் ஆழமாக வேரூன்றியுள்ளது" என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கை பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவர்களது அவதானிப்பினையும் இவ்விடயத்தில் சுட்டிக்காட்டியுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், கொடுங்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலுக்கு தடையென்பது அரசியல் திடமின்மை அல்லது செயல் திறனின்மையோ காரணமல்ல என்பதற்கு அப்பால், சிங்கள பௌத்த மத அடிப்படைவாதமே காரணமென்பது தெளிவாகின்றது.

இவ்வகையிலேயே இலங்கை தொடர்பிலான ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளரின் அறிக்கையின் முன்வைத்ததுபோல், பன்னாட்டு சமூகம் சர்வதேச நீதிக்கான நோக்கினை கொள்ள வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளது. (நி)

## தேசிய அரசாங்கத்திற்கு வாய்ப்பே இல்லை அடியோடு மறுத்தார் பிரதமர் மகிந்த

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் அமைக்கும் உத்தேசம் கிடையாது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கம் நிறுவப்பட உள்ளதாகவும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசாங்கத்தின் பிரதமராக ரணில் விக்ரமசிங்க கடமையாற்றுவார் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாது என பிரதமர் திட்டவட்டமாக மறுத்துள்ளார். (நி)

## தங்க நகைகளை தந்து நாட்டை மீட்டெடுங்கள்

### மக்களிடம் கோரிக்கை விடும் அமைச்சர் சி.பி

(கொழும்பு)

பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்த கொரிய நாட்டை மீட்டெடுக்க மக்கள் முன்வந்தார்கள். தமது காதுகளில் கழுத்துகளில் இருந்த தங்க நகைகளை வழங்கினார்கள்.

அதுபோன்றதொரு செயலை இலங்கை மக்களும் செய்ய முன்வர வேண்டும் என அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி)

## நாட்டின் வங்குரோத்து நிலைக்கு மகிந்த காலத்து மோசடிகளே காரணம்

### முன்னாள் ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடு இன்று வங்குரோத்து நிலைமையை அடைய, மகிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் இடம்பெற்ற பாரிய மோசடிகளே காரணம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்டினார்.



வீதி அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் மோசடி, தனியார் வங்கிகளிடம் அதிக வட்டிக்கு கடனை பெற்றுக்கொண்டமை என்பனவே இந்நிலைக்கு காரணம் எனவும் தெரிவித்தார்.

மேலும் மத்தள விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் அமைத்தமை மூலம் அவரவர் பைகளை நிரப்பிக் கொண்டனர் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்டினார். (நி)

## முச்சக்கர வண்டி கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

முச்சக்கர வண்டி கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி முதல் கிலோ மீற்றருக்கான கட்டணம் 70 ஆக அதிகரிக்கப்படும். அத்துடன், மேலதிகமாக ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் 55 ரூபா அறவிடப்படும் என முச்சக்கர வண்டி ஓட்டுநர் சங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் பெற்றோல் விலை உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் கட்டுப்பாடின்றி அதிகரித்து வரும் நிலையிலேயே முச்சக்கரவண்டி கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக முச்சக்கர வண்டி ஓட்டுநர் சங்கம் அறிவித்துள்ளது. (நி)

## மத்திய வங்கி ஆளுநர் பதவிக்கும் 'செக்' வைக்கும் பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை தவிர்க்க சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது தொடர்பில் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கும் இடையில் முரண்பாடுகள் வலுவடைந்துள்ளன.

இதனால் புதிய ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படலாம் என தகவல் வெளியாகி உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் மத்திய வங்கி ஆளுநர் தொடர்ந்தும் உள்ளார். இதனால் பசில் ராஜபக்ஷ கடும் சீற்றம் அடைந்துள்ளதாக நிதியமைச்சின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பசில் ராஜபக்ஷவுடன் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சு பதவிகளிலிருந்து நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 110 | 130 | 110 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 300 | 500 |
| தக்காளி | 260 | 220 | 250 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 90 | 80 |
| கோவா | 100 | 100 | 110 | 120 |
| கரட் | 200 | 300 | 330 | 350 |
| பூசணி | 120 | 130 | 120 | 140 |
| புடோல் | 180 | 250 | 180 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 100-250 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 170 | 200 |
| பாகற்காய் | 350 | 350 | 400 | 450 |
| வெண்டிக்காய் | 200 | 180 | 160 | 240 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 180 | 100 | 200 |
| லீக்ஸ் | 160 | 150 | 140 | 200 |
| பீற்றூட் | 180 | 150 | 180 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 280 | 240 |
| முருங்கைக்காய் | 1200 | 800 | 1000 | 1200 |
| போஞ்சி | 200 | 200 | 270 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 160 | --- | 220 |
| கீரை - 1 பிடி | 100 | 60 | 100 | 100 |
| தேசிக்காய் | 100 | 140 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 150 | 180 | 160 |
| வெங்காயப்பூ | 160 | 130 | 140 | 280 |
| முள்ளங்கி | 40 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | - | 150 | 80 | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக, எதைப் போலவோ தோன்ற எண்ணிப் பாசாங்கு செய்பவர்கள், அவர்கள் பாசாங்கு செய்வதற்கு முற்றிலும் எதிர்மாறாகவே உண்மையில் இருப்பார்கள்.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யுத்தம் நடத்தி நாட்டை அழித்து உலகுக்குப் பாடமாகிய இலங்கை

தேவையற்ற வேலையை ஒருவன் செய்வானாயின் தேவையுள்ள வேலையைச் செய்ய முடியாமல் போகும் என்பது நிதர்சனமான தத்துவம்.

இதற்கு இலங்கை அரசாங்கம் நல்ல தோர் உதாரணம்.

ஆம், சிறிய நாடான இலங்கை உலக நாடுகளை அனுசரித்துக்கொண்டு, உள்நாட்டில் மனித உரிமைகளை நூறுவீதம் பேணிப் பாதுகாத்த வண்ணம் செயற்படுவதுதான் அதற்குச் சிறந்த வழியாக இருந்திருக்கும்.

ஆனால், ஆட்சித் தரப்பு அதனைச் செய்யாமல், இந்தியாவிடம் உதவிகளைப் பெற்றுவிட்டு, சீனாவுடன் உறவைப் பேணுவது என முடிவு செய்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பது உள்ளிட்ட விடயங்களில் இந்தியா அழுத்தம் தந்தால், அதிலிருந்து தங்களைப் பாதுகாக்க சீனாவுடன் அதீத உறவைப் பேண வேண்டுமென்ற குறுக்குப்புத்தி இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது.

இந்தக் கெடுபுத்தி எல்லாவற்றையும் பரிநாசப்படுத்தி விட்டது.

உண்மை, இதோ! இந்தியாவுக்கு காட்டுகின்றேன் பார் என்று சீனாவை உள்வீட்டுக்குள்விட, சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்த சீனா; இலங்கைக்குள் தனது மூக்கை நுழைத்துக் கொண்டு தீவகத்தைத் தருகிறாயா? சம்பூரை காணிக்கையாக்குகிறாயா? என்று கேட்க,

உதவும் என்று நினைத்த நாடு உபத்திரமாகிப் போயிற்று.

இந்தநிலையில் மிகவும் பொறுமையாக இருந்த இந்தியா கனகச்சிதமாகக் காய் நகர்த்தியது.

இலங்கையின் தந்திரம் அதற்கு அவதந்திரமாகிப்போக, இப்போது சீனாவும் இல்லை. இந்தியாவும் இல்லை என்ற வெறுநிலையில் சர்வதேச நாடுகளின் உதவியும் இல்லை என்றாயிற்று.

இதைத்தான் தேவையற்ற வேலை என்று கூறலாம்.

இராஜதந்திரம் என்று நினைத்து சீனாவுடன் உறவு வைத்த இலங்கையின் பொருளாதாரம் இப்போது சின்னாபின்னமாகிப் போக, உதவுவதாக இருந்தால், அடமானம் வை என்று நிபந்தனை விதிக்கிறது இந்தியா.

இனி எரிபொருள் நிலையத்தில் துடுப்பாட்டம் நடக்கும். உற்பத்தி, வர்த்தகம், சேவை முயற்சிகள் யாவும் முடங்கும்.

அஃது நாட்டின் பொருளாதாரத்தை மென்மேலும் அதலபாதாளத்தில் வீழ்த்தி ஏழ்மை நாடுகளில் இலங்கை முதலிடம் என்பதாகப் பதிவிடப்படும்.

தவிர, எங்கும் பஞ்சம் பசி படையெடுக்கும். கொலை, கொள்ளை, களவு தாண்டவமாடும். சண்டித்தனச் சமூகம் மேலெழும். சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு கந்தறுந்து போகும்.

ஒட்டுமொத்தத்தில், வீதியில் நடந்து போனாலே எட்டிப் பிடுங்கிச் செல்லும் பஞ்சத்துக் கலாசாரம் பவனி வரும்.

ஓ! இலங்கைத் திருநாடே! யுத்தத்தை நடத்தி நாட்டை அழித்த உன் சரித்திரத்தில் இருந்து, உலகம் கற்றுக் கொள்ளும்.

நீ குட்டிச்சுவராகி மற்றவர்களுக்குப் போதிக்கும் பாடப் புத்தகமானாய். இதுதான் உன் பிரித்தோதலுக்குக் கிடைத்த வரம்.

# டீசலுக்கு மானியம் வழங்காவிட்டால் பேருந்து கட்டணம் அதிகரிக்கும்

## தனியார் பேருந்து உரிமையாளர்கள்

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றம் காரணமாக டீசலுக்கு மானியம் வழங்குமாறு கோரி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் போக்குவரத்து அமைச்சிடம் கோரிக்கையை முன்வைக்கவுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அவ்வாறு மானியம் வழங்கப்படாவிட்டால் பேருந்துக் கட்டணத்தை 30 சதவீதத்தினால் அதிகரித்து திருத்தம் மேற்கொள்ளப்படும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கட்டணங்கள் அதிகரிக்கப்படுமாயின் குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் 25 முதல் 30 ரூபாய் வரையிலும் ஏனைய கட்டணங்கள் சுமார் 30 சதவீதத்தால் அதிகரிக்கப்படலாம். என்று அகில இலங்கை தனியார் பேருந்து கம்பனிகள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார். (ம)

## பதுளை ஓயாவில் பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(பதுளை)

பதுளை - ஓயாவில் நீராட சென்ற நிலையில், 16 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தமது நண்பர்களுடன், நேற்று குறித்த ஓயாவில் நீராட சென்ற நிலையில், மாணவன் இவ்வாறு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் பதுளை 3ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த 16 வயதுடையவராவார்.

சம்பவம் தொடர்பில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

## சம்மாந்துறையில் மின்சார்ரம் தாக்கியதில் இரு சிறுவர்கள் பலி

(மட்டக்களப்பு)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் உள்ள நெய்னாகாடு எனும் கிராமத்தில் பட்டம்பிட்டிய இடத்திலுள்ள தென்னந்தோப்பில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு மின்சார வேலியில் சிக்குண்ட பதின்மூன்று வயதுடைய இரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். நேற்று இச்சம்பவம் மதியம் இடம்பெற்றுள்ளது.

குறித்த தென்னந்தோப்பிற்கு வழமை போன்று விறகு சேகரிக்க சென்ற றியாஸ் முஹம்மட் ஆசீக் (13 வயது), முஹம்மட் இப்றாஹிம் (13வயது) என்ற இரண்டு சிறுவர்களே யானை பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் வைரவப்புளியங்குளம், ஆதிவிநாயகர்கோவிலடி, கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், ஆசிக்குளம் மறக்கறம்பளை- கணேசபுரம், முகத்தாங்குளம் 1ஆவது பண்ணை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கனகராயன்குளம் சந்தி, கனகராயன் குளம் ஆலங்குளம் (புதுவிளான்), கறுப்புக்குத்தி இராணுவமுகாம், குறிசுட்டான்குளம், பரசங்குளம், புதூர்கோவிலடி, புத்தூர்கோபுரம், புதுக்குளம், புதூர்கிராமம், விக்னகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சாவகச்சேரி மீசாலையில் ஆசிரியர் மீது தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-மீசாலைப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர் மீது மாணவன் ஒருவரின் உறவுகள் தாக்குதல் நடத்தியதில் ஆசிரியர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.


ஆசிரியரின் வீட்டுக்குச் சென்ற மாணவனின் உறவுகள் ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மேலும் மாணவனுடைய பெற்றோர் ஆசிரியர் மீது பொலிஸ் முறைப்பாடு வழங்கியிருக்கும் அதேவேளையில் தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியரும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

## துன்பங்கள் வந்தால், நன்மையாக முடியட்டும்



சாதாரண மனிதன் முதல் ஜாம்பவான் வரை அவரவருக்கு ஏற்றார் போல் பிரச்சினைகள் வருவது நிச்சயம். பக்திமானுக்கும் பாவிக்கும் இன்ப துன்பம் சரிசமமாய் சம்பவிக்கின்றன. (பிர.9:2.3). இவை யாரால் வருகின்றன? (பிர.3:10), (பிர.2:26).மனிதனுக்கு தொல்லைகளை இறைவன் நியமித்திருந்தாலும், பாவ செயல்களால் அவற்றை நாமே வருவித்துக் கொள்கிறோம். நமக்கு பல்வேறு துன்பம், வியாதி, வேதனைகள் நெருக்கடி கொடுக்கும் போது அதிலிருந்து எதையாவது செய்து வெளிவந்துவிட வேண்டும் என்றுதான் நினைக்கிறோம். அவை நேர்ந்ததற்கான காரணத்தை சிந்தித்துப் பார்ப்பதில்லை. (பிர.7:14).வாழ்வை மாற்றிப் போடும் அளவுக்கு ஒருவனை துன்பங்கள், வியாதிகள் வந்து நெருக்குகிறது என்றால், அவனைக் குறித்த தேவ சித்தம் நிறைவேறும் காலகட்டம் என்றோ அல்லது வாழ்க்கையை நல்வழிப்படுத்துவதற்கான திருப்புமுனை

என்றோ அதை எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் பாவங்களை விட்டு விலகி நல்வழியைக் காண, இறைவன் இயேசுவிடம் முற்றிலும் சரணடைய வேண்டும். இந்த காலகட்டங்களில் மற்ற மனிதர்களின் உதவியை நாடி, பணம், ஆள்பலத்தின் மூலம் தீர்வு காண முயற்சிக்க வேண்டாம். ஏனென்றால் அவை தற்காலிக தீர்வையே தரும். இந்த வழியில் சென்றால் மேலும் பல தவறுகளைச் செய்ய வேண்டியது இருக்கும். பெரும் வியாதிகளில் சிக்கிக் கொள்ளும் போது, மருந்து சாப்பிடுவது தவறல்ல. ஆனால் மருந்து தரும் சுகத்தை பெற்றுக் கொண்டு அப்படியே தொடர்ந்து இருந்து விடாமல், மனம் திரும்பி இறைவனின் வழிக்கு வர வேண்டும். பாவ செய்கைகளை வெறுக்க வேண்டும்.பிரச்சினைகள் தீர உங்களுக்காக நீங்களே ஜெபம் செய்யுங்கள். பக்தியுள்ள நண்பர்களின் ஜெபம் உங்களுக்காக ஒரு பக்கம் ஏறெடுக்கப்பட்டாலும், மறுபக்கம் உங்களது உள்ளமும் ஜெபத்தில் இறைவனை சார்ந்து இருப்பது மிகவும் முக்கியம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனப்பகுதிகளுக்கு யானை வேலிகள் அமைக்கும் பணி முன்னெடுப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மேழிவனம் 'கிராமத்தைச் சூழவுள்ள வனப் பகுதிகளுக்கு யானை வேலி கள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றாக காணப்படுகின்ற மேழிவனம் கிராமத்தில் தற்போது 75க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் தொடர்ச்சியாக குறித்த கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை காரணமாக பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் விவசாய செய்கைகளும் காட்டு யானைகளால் அழிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் ஊருக்குள் புகுந்த யானை. அறுவடை செய்து வீட்டினுள் அடுக்கி வைத்திருந்த நெல் மூடை களை வீட்டினை உடைத்து சேதப்படுத்தியுள்ளன.

இவ்வாறு நாளாந்தம் யானைகளின் அச்சுறுத்தலால் கிராமத்திலுள்ள சகல குடும்பங்களும் பாதிக்கப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளனர்

இந்த நிலையில் குறித்த கிராமத்திற்கு யானை வேலிகளை அமைத்து தருமாறு தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக தற்போது யானை வேலிகளை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த கிராமத்தை சூழ 3.5 கிலோ மீற்றர் வரையான பகுதிகளுக்கு முதற்கட்டமாக யானை வேலிகள் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)



முன்னை நாள் மன்னார் பிராந்திய கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ.சி.அப்துல் ஹக்கின் 10 வது ஆண்டு நினைவு மலரான "கல்வியாளர் ஹக் சேர்" எனும் பெயரில் அருட்திரு.தமிழ் நேசன் அடிகளாரினால் எழுதப்பட்ட நினைவு மலர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நகரசபை மண்டபத்தில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. (படம் : ஜோசப்நயன்)


# பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

## பொதுமக்கள் விசனம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது அரசாங்கத்தினால் பொருட்கள் விலை அதிகரிப்பு காரணமாக மக்கள் அன்றாட தேவைக்கான பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களில் மக்கள் அத்தியாவசிய தேவைக்கு பயன்படுத்தப்படும் அரிசி, பருப்பு. மா. சீனி வகைகள் அனைத்தும் வர்த்தகர்களால்



பதுக்கப்பட்டதன் காரணமாக மக்கள் வர்த்தக நிலையங்களுக்கு சென்று பொருட்கள் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட விசுவமடு பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குடும்ப பங்கீட்டு அட்டைக்கு மாத்திரமே மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாகவும் அதுவும் 200 ரூபாவுக்கு மாத்திரமே வழங்கப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். பல மைல் தூரத்தில் இருந்தும் எரிபொருள் கொள்வதற்காக வந்த போது தமக்கு பங்கீட்டு அட்டை கொண்டு வராத காரணத்தினால் மண்ணெண்ணெய் பெற முடியாமல் போயுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (4-6-316)

# செயற்கை கால் பொருத்தும் முகாம்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் நிதியுதவியுடன், யாழ் இந்தியத் துணைக் தூதரகத்தின் ஏற்பாட்டில் "ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம்" யாழ் மாவட்டத்தில் இன்று 13 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை, யாழ். மாவட்ட முகாமைத்துவ திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வலுவிழந்தோருக்கு சேவை செய்யும் பகவான் மகாவீரர் சஹயட சமித்தி (BHAGWAN MAHAVEER VIKLANG SAHAYATA SAMITI) தொண்டு நிறுவனமும், யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு அலுவலகமும் இணைந்து இம்முகாமை நடத்துகின்றனர். (4-6-33)



கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் பகல் விளக்கு வைத்தல் பூசையுடன் ஆரம்பமாகி பாரம்பரிய முறைப்படி பண்டமெடுத்து வருவதற்காக மாட்டு வண்டிகளில் பக்தர்கள் யாழ் புத்தூர் பண்டமரவடிக்கு சென்றனர். (படம் : தேவானந்தன், யதுபாஸ்கரன்)

# யாழ்.சர்வதேச திரைப்பட விழா 5 ஆம் நாளிற்கான திரையிடல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றுவரும் 7 ஆவது யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழாவின் ஐந்தாவது நாளிற்கான காட்சிப்படுத்தல்கள் முற்பகல் 10 மணிக்கு பிரான்ஸ்-இந்தியா கூட்டிணைவில் உருவான, அமார்த்தியா பட்டாச்சாரியாவின் 'அடியு கோடார்ட்' என்கின்ற திரைப் படத்துடன் ஆரம்பமாகின்றது.

இத்திரைப்படமானது பழமைவாத இந்தியக் கிராமத்தைச் சேர்ந்த ஆபாசத்திற்கு அடிமையான ஆனந்தா என்ற முதியவரை மையமாகக் கொண்டு நகர்கிறது. இரகசியமாக ஆபாசப்படங்களைப் பார்க்கின்ற வேளையில் ஒருநாள் ஆபாசப்படங்கள் என்று தவறுதலாக வாடகைக்கு எடுக்கப்பட்ட கோடார்டின் திரைப்படத்தை அவர் பார்க்கிறார்.

கோடார்டின் திரைப்படத்தில் ஈர்க்கப்பட்டதன் காரணமாக அவருடைய கிராமத்தில் திரைப்பட விழாவை நடத்தும் யோசனையையும் முன்வைக்கிறார். கோடார்டின் திரைப்படங்களையும் திரையிடுகின்றார். பிரெஞ்சுத் திரைப்படத் தயாரிப்பாளர் ஜீன்-லூக் கோடார்டின் திரைப்படப் பணியை மரியாதை செய்யும் முகமாக இத்திரைப் படம் சமர்ப்பிக்கப்படுகிறது.

அடுத்து பகல் 1 மணிக்கு பிரசுன் சட்டர்ஜியின் "தோஸ் தோஜி" (இரண்டு நண்பர்கள்) திரைப்படம் திரையிடப்படுகின்றது. இத்திரைப்படமானது வங்காளதேசத்திலிருந்து பத்மா நதியால் பிரிக்கப்பட்ட மேற்கு வங்காளத்தின் டோம்கல்வி (முர்ஷிதாபாத்) எல்லைக் கிராமத்தில் வாழ்கின்ற இரண்டு வேறுபட்ட மதப்பின்னணியைச் சேர்ந்த சிறுவர்களின் அப்பாவி நட்பைத்திரைக்கதை பேசுகிறது.

மாலை 4.45மணிக்கு ஆண்ட்ரஸ் வெய்ல்ன் "ஒகோசிட்" என்ற ஜேர்மனியத் திரைப்படமாகும். 2034 ஆம் ஆண்டு காலநிலை மாறுதல்களினால் ஏற்படுகின்ற பாரிய விளைவுகளை கற்பனையான உள்ளடக்கமாகக் கொண்டுள்ள இத் திரைப்படம் வறட்சி, வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்கள் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கிறது என்பதற்கான நீதியைக் கோருகின்றது.

நண்பகல் 12.00 மற்றும் பிற்பகல் 3.30 இற்கு விருதுக்காகப் போட்டியிடும் இலங்கை, இந்தியா, ஆர்மேனியா, பிரான்ஸ், போர்த்துக்கல், கஜகஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் குறுந்திரைப் படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் இவ்விழாவின் மற்றொரு அங்கமாக "திரைப்பட உருவாக்கத்தில் பெண்கள்" என்ற தலைப்பில் திரையிடலும் அதனைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இல. 50, கண்டி வீதியிலுள்ள கலம் நிறுவனத்தில் பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரை இடம்பெறவுள்ளது.

பாத்திமா ஷபானி றெபாலின் "கவேர்ட்", சுவன்யா சிறீதரின் "பூங்கோதை" மற்றும் நயோமி அப்சராவின் "த ரீ இஸ் கோல்ட்" ஆகிய மூன்று பெண் இயக்குநர்களின் திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படும். அதனைத் தொடர்ந்து இன்று இலங்கையில் எல்லைகள் கடந்தளவிலான திரைப்படங்களின் தயாரிப்பு தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறும்.

இக்காட்சிகள், நிகழ்வுகள் அனைத்தும் இலவசம், சினிமா ரசிகர்கள் அனைவரையும் இக்காட்சிகளில் பங்குபற்றித் திரைப்படங்களினைப் பார்த்து மகிழுமாறு விழாக் குழுவினர் அழைத்து நிற்கின்றனர். (4)

# பயங்கரவாத சட்டத்திற்கு எதிராக உரும்பிராயில் கையெழுத்து போராட்டம்



(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து பெறும் நடவடிக்கை நேற்று யாழ்ப்பாணம் - உரும்பிராயில் இடம்பெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்து பெறும் நடவடிக்கை நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்ப்பாணம் உரும்பிராயில் இடம்பெற்றது.

குறித்த கையெழுத்துப் பெறும் நடவடிக்கையில் பல பொதுமக்கள் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் நிதி நெருக்கடி
## அபிவிருத்தியை கைவிடுங்கள்
### மத்திய வங்கி அரசுக்கு பரிந்துரை

(கொழும்பு)

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை தற்காலிகமாகக் கைவிடுமாறு அரசுக்கு, இலங்கை மத்திய வங்கி பரிந்துரை செய்துள்ளது.

சுமார் ஓராண்டு வரை பிற்போடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான காரணமும் விவரிக்கப்பட்டுள்ளது.

அரசால் பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு இலட்சம் வேலைத்திட்டமும் இதில் உள்ளடங்கும். எனினும், மத்திய வங்கியின் யோசனையை அரசு ஏற்குமா என்பது பற்றி இன்னும் தெரியவரவில்லை.

நாட்டில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், அத்தியாவசிய சேவைகளுக்கு, தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையிலேயே இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. (ம)

## பொன்...

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது. (ம-33,104)

## சிலிண்டர்...

கையாளர்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது.

கடந்த இருநாட்களாக சுமார் 200,000 எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகித்ததாக லிட்ரோ தெரிவித்துள்ளது. (ம)

## அதிகரிக்குமாறு...

குமாறு மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் கொள்வனவிற்கு தேவையான நிதி இல்லாத காரணத்தினால் நாடுதழுவிய ரீதியில் மின்விநியோக தடை அமுல்படுத்தப்படுகிறது என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம)

## பாணைக்...

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கோதுமை மாவின் விலை 40 ரூபா வரை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக பாண் உட்பட பேக்கரி பொருட்களின் விலை அதிகரிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பாண் ஒரு இறாத்தல் 120 ரூபா வரை அதிகரிக்கும் நிலையே இருக்கின்றது.

இன்று சாதாரண மக்கள் காலை மற்றும் இரவு உணவுக்காக பாண் எடுப்பது வழக்கம் தற்போதுள்ள நிலையில் அவர்களுக்கு பாண் சாப்பிட முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதேபோன்று நாட்டில் எரிபொருள், காஸ், பால்மா போன்ற அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இருப்பதால் அதனை பெற்றுக்கொள்ள மக்கள் வரிசையில் இருந்து வருகின்றனர்.

வரிசையில் இருக்கும் மக்கள் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இந்நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்ல முடியாது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இனவாதத்தை பரப்பி மக்களை ஏமாற்றியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

நாட்டை கொண்டுசெல்ல கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷவுக்கு எந்த வேலைத்திட்டமும் இல்லை. இவர்களால் முடியாது என்பதை மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர்.

அதனால் அரசாங்கம் மேலும் நாட்டை செயலிழக்கச் செய்யாமல் ஆட்சியை கைவிட்டுச் செல்ல வேண்டும் என்றார். (ம)

## இந்தியா...

விஜயம் வலுவூட்டும் என இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ம)

## பேருந்து...

குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பேருந்து உரிமையாளர்களுக்கு, டீசல் மானியத்தை வழங்க முடியுமா? என்பது குறித்து, நிதி அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளோம்.

இதன்போது, எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளார். (ம)

## மக்கள்...

கைச் செலவைத் தாங்க முடியாமல் மக்கள் கிளர்ச்சிக்குத் தயாராகி வருகின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார். (ம)

## “ஈழ...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிராக தமிழகத்தில் எதிர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சென்னை - தி.நகர் - தாமோதரன் தெருவிலுள்ள இந்து மக்கள் கட்சி காரியாலயத்திற்கு முன்பாக இந்த எதிர்ப்பு போராட்டம் நேற்று மதியம் முன்னெடுக்கப்பட்டது

ராஜபக்ச குடும்பத்தோடு இணைந்து, ஈழ மக்களுக்கு எதிராக சுமந்திரன் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தியே இந்த போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

ஈழத்துக்காக தமிழகத்தில் 18 பேர் தமது உயிர்களை தியாகம் செய்துள்ளதாக கூறிய ஆர்ப்பாட்டக்காரர்கள், அவ்வாறான தேசத்திற்கு சுமந்திரன் போன்றவர்கள் வருவதை அனுமதிக்கக்கூடாது என அவர்கள் கூறியிருக்கின்றனர்.

சென்னைக்கு சென்றிருந்த சுமந்திரனை, உடனடியாக திருப்பி அனுப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமை பேரவையின் விசாரணைகளை ஒத்திவைப்பதற்கு சுமந்திரனே காரணம் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள எம்.ஏ.சுமந்திரனை, தமிழகத்திலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம)

## மாகாண சபை...

“மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடக்குமா?” என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர்,

“ஆம். நடக்கும். கூடிய விரைவில் நடக்கும். எந்த முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதென விரைவில் தீர்மானிக்கப்படும்” என்றார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவுவதில் இந்தியா முக்கிய பங்கை வகிக்கின்றது எனவும் இந்தச் சந்திப்பின்போது பிரதமர் மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டார்.

உக்ரைனில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமை இலங்கைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் சுற்றுலாப் பயணிகள்வருகை, இலங்கையின் ஏற்றுமதிஎன்பன பாதிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## பரீட்...

ருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

முடிவுகளை https://www.doenets.lk/examresults இணையத்தளம் அல்லது https://www.exams.gov.lk/examresults இணையத்தளம் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

பரீட்சை திணைக்களம் அல்லது பரீட்சை ஆணையாளர் இதுவரை பரீட்சை முடிவுகள் வெளியிடும் திகதியை அறிவிக்கவில்லை. (ம)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 12/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1222
வெற்றி இலக்கங்கள்
தனுசு 4 6 0 1 9 7
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 12/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1052
வெற்றி இலக்கங்கள்
H 25 32 54 71 75

மஹஜன சம்பத
திகதி 2022/03/12
சீட்டிழுப்பு இலக்கம் 4704
R 3 9 4 7 0 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.03.12
சீட்டிழுப்பு இலக்கம் - 734
Y 36 39 57 58

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1507
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2022.03.12
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,745,520/-
வெற்றி இலக்கங்கள் 34 36 45 74 G

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.12
சீட்டிழுப்பு இல: 3842
வர்ணம்: பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,378,560/-
வெற்றி இலக்கங்கள் 05 23 55 63 F

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,406,116/-
வெற்றி இலக்கங்கள் 02 06 45 48
திகதி 2022-03-12
சீட்டிழுப்பு வாரம் 3393
வர்ணம் இள நீலம்
9 7 0 3 4 2 3
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,636,360/-

R 33 16 19 21 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 221,341,771/-
சீட்டிழுப்பு வாரம் 857
வர்ணம் சிவப்பு
திகதி 2022.03.12 சனிக்கிழமை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1681 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022/03/12 தினம் சனி
I 15 25 34 44
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 52,165,272/-

සංවර්ධන වාසනාව
திகதி: 2022-03-12
வெற்றி வாரம்: 493 | வர்ணம்: சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.14,392,964/-
F 65 10 42 2
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ 2,397,240/-
ரூ.14,514,464/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா 9 பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் மேலும் 9 கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,390ஆக அதிகரித்துள்ளது. (ம)


## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் புடைவை நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை:
- விற்பனையாளர் - (ஆண் - 02, பெண் - 02) (சம்பளம் - 18,000/=)
- முகாமையாளர் - 01 (சம்பளம் - 35,000/=)

(10613)

- 077 855 4840

## வெளிநாட்டில் படிக்க இலவச வழிகாட்டுதல்

கனடா, இங்கிலாந்து அல்லது ஐரோப்பிய நாடுகளுக்குப் படிப்பதற்காக/ குடியேறுவதற்கான தகுதியைப் பார்க்க உங்கள் C/V மற்றும் ஆவணங்களுடன் வருகை தரவும்.
கட்டணம் இல்லை.

திகதி : 17.03.2022
இடம் : Bastain Hotel, No. 37, Kandy Road, Jaffna.
நேரம் : 9.00 am - 5.00 pm



மேலதிக விபரங்களுக்கு விக்னேஷ்வரனை
077 740 9523/ 077 102 7836
என்ற எண்ணில் தொடர்புகொள்ளவும்.
(10585)

## ARPICO Insurance — பதவி வெற்றிடம்

இலங்கையில் 90 வருட காலமாக இயங்கிவரும் நிதி நிறுவனமானது நெல்லியடியில் தனது கிளை ஒன்றினை புதிதாக ஆரம்பிக்கவுள்ளது.
இங்கு பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தகுந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கமுடியும்.

01. நிரந்தர அலுவலக உதவியாளர்
02. கிளை முகாமையாளர் (நிரந்தரம்)
03. வெளிக்கள முகாமையாளர் (நிரந்தரம்)
04. வெளிக்கள ஆலோசகர்
EPF, ETF உண்டு.

தகைமைகள் : G.C.E (A/L) அல்லது அதற்கு மேல்.
வரையறுக்கப்பட்ட வெற்றிடங்கள் உள்ளமையால் தகுதியான முதல் வரும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
075 050 1989 / 072 346 5014
Jobsvac.lk@gmail.com
(C-3956)

## வீடு வாடகைக்கு தேவை

Hall, 2 Rooms, Attached Bathroom, Kitchen ஆகியவற்றுடன் அமைதியான சூழலில் வீடு வாடகைக்கு தேவை.
ஊரெழுவிற்கும் திருநெல்வேலிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் பலாலி வீதிக்கு அண்மையில் விரும்பத்தக்கது.
(10610)
077 916 8185

## 30 நாட்களில் ஆங்கிலம்

Spoken English with Grammer
DVD மற்றும் பயிற்சி புத்தகம்
1000/=
077 088 5678
(10611)

10வருட வெற்றிகரமான சேவையில். SEP/2022

## UK அல்லது கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...
(C-3945)

WORLD EDUCATION CONSULTANCY
0779265447 / 0217200989

## விரைவு பொதிகள் சேவை
## V2 TRAVELS

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

0768226240 DHL
(C-3942)

## SPOKEN ENGLISH

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
- IELTS (students visa)
- IELTS LIFE SKILLS A1 (London)

நேரடியாகவும் online மூலமாகவும் நாட்டின் எப்பகுதியிலிருந்தும் கற்கலாம்.
(10576)
072 267 6713

## தென்னங்காணி விற்பனைக்குண்டு

எழுதுமட்டுவாள் A9 வீதியிலிருந்து 1½ தூரத்தில் 15 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.
5 ஏக்கர்களாக பிரித்தும் கொடுக்கப்படும்.
(10543)
077 653 1980, 074 037 1960


## வேலையாள் தேவை

நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையத்திற்கு பெண் ஊழியர் தேவை.
வயது : 20-40
முதல் மூன்று மாதங்களில் 15,000/=
பின்னர் 20,000/= - 25,000/=
மேலதிக விபரங்களுக்கு
(10596)
077 430 7829

## BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's

BTEC HND
### Quantity Surveying & Construction Economics
Leading to BSc(Hons)



23 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Quantity Surveying கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி.
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Quantity Surveying நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடை முறைப்பயிற்சிகள்.

Pearson | BTEC Approved Centre | OXFORD BROOKES UNIVERSITY

077 710 2131
077 068 8828
INTAKE NOW ON
BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.
23 YEARS OF TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION
(C-3944)

021 221 9910 info@bcas.lk www.bcas.lk BCAS Ranked "Platinum Partner" No.1 once again


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
விலை : 30.00
வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 335
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2053 13.03.2022 தொலைபேசி : 021 222 3378

## அணைய வேண்டியது எரிகிறது






## எரிய வேண்டியது அணைகிறது

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில சில நிமிடம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க, கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:** வாத்தியார் இப்ப தெருவில மின் விளக்குகளும் இல்லை. அந்தக் காலம் போல இனி கோயில்களைச் சுற்றியும் தெருக்களிலும் கண்ணாடி விளக்குகளை ஏற்ற வேணும் போல.

**மூப்பர்:** அதுக்கும் தேங்காய் எண்ணெய் என்ன குறைஞ்ச விலையோ.

**சாத்திரியார்:** அப்ப இருண்ட வீதியாலதான் பயணிக்க வேணும் போல.

**சிறாப்பர்:** இருண்ட வீதியால நடந்து போக, அதிக வேகத்தில வாற பெடியள் அடிச்சு விழுத்தி சாகடிச்சுப் போடுவாங்கள்.

தெரு விளக்குகள் எரியாத வரை, எங்களைப் போன்ற முதியவர்கள் இராப் பொழுதில நடமாடுவதைத் தவிர்க்கிறதுதான் புத்திசாலித்தனம்.

(இவ்வாறு சிறாப்பர் கூற, விதானையார் விசுவலிங்கம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார்.)

இதனை அவதானித்த பண்டிதர் என்ன? விதானையார் கடும் யோசனையாக் கிடக்குது. என்ன சங்கதி.

**விதானையார்:** இல்லை, எங்கட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்திக்கப் போகுதாம்.

சிலவேளை ஜனாதிபதியைச் சந்தித்து தனிநாட்டை வேண்டிற்றினம் எண்டால், என்ன செய்யிறது எண்டுதான் யோசிக்கிறன்.

(இவ்வாறு விதானையார் கூறியதும் ஆலடியில் இனம்புரியாத நிசப்தம் நிலவியது.)

அந்த நிசப்தத்தை கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:** விதானையார் சொல்லுற மாதிரி; இந்த நேரத்தில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி கோட்டாபயவை சந்திக்கிறது கூட்டமைப்பிற்கும் நல்லதல்ல, தமிழ் மக்களுக்கும் நல்லதல்ல.

குச் சாதகமில்லை எண்டு சொல்ல முடியாது.


இப்ப தேசிய அரசை அமைத்தால் என்ன? எண்டு ஆட்சித் தரப்பு யோசிக்குது. இந்த நேரத்தில எதிர்க்கட்சிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற வேளையில, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் போய் ஜனாதிபதி கோட்டாபயவைச் சந்திப்பது ஆளும் தரப்பைக் காப்பாற்றுகிற வேலை என்பதுதான் என்ர கருத்து.

**கங்காணி:** ஓ! நல்லா

அதற்குள்ள இருக்கிற இராஜதந்திரத்தை எங்கட ஆட்களால புரிந்து கொள்ள முடியாது.

**விதானையார்:** ஆட்சியை நடத்த முடியாது என்ற கையறு நிலை; உலக நாடுகளும் கைவிரித்திருக்கிற இந்த நேரத்தில, கூட்டமைப்பினர் ஜனாதிபதி கோட்டாபயவைச் சந்திக்கிறது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

**வாத்தியார்:** எங்களுக்குக் கிடைச்ச சாதகமான அரசியல் கள நிலை



## இந்த நேரத்தில ஜனாதிபதியை சந்திக்கிறது சரிதானோ?

**சாத்திரியார்:** ஏன்? வாத்தியார், ஜனாதிபதி கோட்டாவைச் சந்திக்க வேணுமெண்டு கூட்டமைப்புத்தானே கேட்டது.

**வாத்தியார்:** ஜனாதிபதி கோட்டாவைச் சந்திக்க வேணும் எண்டு கேட்ட கால சூழ்நிலை வேற, இப்ப இருக்கிற சூழ்நிலை வேற.

இப்ப இருக்கிற இந்தச் சூழ்நிலையில ஜனாதிபதி கோட்டாபயவை கூட்டமைப்பினர் சந்திக்கிறது ஜனாதிபதிக்குச் சாதகமல்லாது, கூட்டமைப்பிற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ அல்ல.

**விதானையார்:** [illegible] தியார், கூட்டமை[illegible]

ட்சியில எதிர்க்கட்சித் தலைவராக இருந்திட்டன். இனி ஜனாதிபதி கோட்டாபயவின்ர ஆட்சியில தேசிய அரசு அமைந்தால், சிலவேளை பிரதமர் பதவி தனக்குக் கிடைக்கலாம் எண்டும் சம்பந்தர் ஐயா நினைப்பாரோ.

**பண்டிதர்:** ஓ! வயது போகப் போகத்தானே பதவி ஆசை பிடிக்கிறது. அதோட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இதுவரை சந்திக்காத ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ; எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதி கூட்டமைப்பைச் சந்தி [illegible]

மைகளையெல்லாம் போட்டுடைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் போட்டுடைக்கத்தான் போகுது.

**சிறாப்பர்:** என்னைப் பொறுத்த வரையில ஜனாதிபதி கோட்டாபய தன்னை ஒரு பௌத்த சிங்களப் பேரினவாதியாகவே காட்டிக் கொள்ளுவார்.

கூட்டமைப்பின்ர எந்தக் கோரிக்கையையும் அவர் ஏற்க மாட்டார் என்பதை நான் எந்தக் கோயிலிலும் கற்பூரம் அணைச்சுச் சத்தியம் செய்வன்.

**சிறாப்பர்:** இலங்கையின்ர சமகால பொருளாதார நெருக்கடி என்

பது சர்வதேச நாடுகளின்ர இறுக்கமான போக்காலும் தான் ஏற்பட்டிருக்குது.

இவ்வாறு சர்வதேச நாடுகள் இலங்கை விடயத்தில இறுக்கமாக இருப்பதற்குக் காரணம், தமிழ் மக்களின்ர பிரச்சினைக்கு இலங்கை அரசு தீர்வை முன்வைக்க வேணும். மனித உரிமைகளைப் பாதுகாக்க வேணும் என்பதுதான்.

ஆனால் இதைப் புரிந்து கொள்ளாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி கோட்டாபயவைச் சந்தித்த பிறகு; நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறம், பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் எண்டு அறிக்கை விட்டு, சர்வதேசத்தின்ர முகத்தில களிமண்ணைப் பூசப் போகினம்.

**சாத்திரியார்:** இஞ்சே சிறாப்பர் இதப்பா எங்கட தலைவிதி; உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பது போல, எங்களுக்கு ஈனம் நாங்கள்தான்.

இந்தக் கன்ம வினையில இருந்து மீள முடியாதென்பதால தானே யோகர் சுவாமிகள் காசியில இருந்து எழுதின கடிதத்தில, தமிழற்ற எல்லா அலுவலையும் காசியில முடிச்சிட்டன் எண்டு சொன்னவர்.

இவ்வாறு சாத்தியார் கூறியதும் எல்லோர் முகத்திலும் சோகம் புரையோடியிருந்தது.

இதனை அவதானித்த பண்டிதர்; இப்ப சில அங்கிடுதத்திகள் பொது அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு, நாங்கள் உதவி செய்ய இருக்கிறம். உங்களுக்குத் தெரிந்த ஐந்து, பத்துப் பேரின்ர தொலைபேசி இலக்கத்தைத் தாருங்கள் எண்டு கேட்டுக் காசு கறக்கிற கயமைத்தனத்தில இறங்கியிருக்கினம். இது விடயத் தில அனைவரும் விழிப்பாக இருக்க வேணும்.

இவ்வாறு பண்டிதர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுத வியாபாரிகள் ஆசைப்பட்ட போர்!


இரண்டாம் உலகப் போரில் பல நாடுகளின் அழிவுக்குக் காரணமாக இருந்தது ஜேர்மனி. அதன்பின் ஆயுதங்களுக்குச் செலவழிக்கவே கூச்சப்படுகிற நாடாக அது இருந்தது. முதல் முறையாக இப்போது ரஷ்யாவைப் பார்த்து பயந்து இராணுவ பட்ஜெட்டுக்கு 8,35,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

சீனா வரும் ஆண்டுக்கான இராணுவ பட்ஜெட்டைக் கடுமையாக உயர்த்தியுள்ளது. 17,73,000 கோடி ரூபாய் என்பது இதுவரை இல்லாத செலவு.

உலகின் மிகப்பெரிய ஆயுத நிறுவனங்கள் அமெரிக்காவின் ரேத்தியான் மற்றும் லாக்ஹீட் மார்ட்டின். "உக்ரைன் பிரச்சினையால் நமக்கு நல்ல பிசினஸ் கிடைத்துள்ளது" என்று இந்த இரு நிறுவனங்களும் வெளிப்படையாகத் தங்கள் முதலீட்டாளர்களிடம் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளன.

இரண்டுமே ஏவுகணைகளை அதிகம் தயாரிக்கும் நிறுவனங்கள். பணவீக்கம் காரணமாக அமெரிக்காவின் பல ஆயுத நிறுவனங்களின் பங்குகள் சரிவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. உக்ரைன் போர் ஆரம்பித்த நாளிலிருந்து அவற்றின் மதிப்பு உயர்ந்து வருகிறது.

**"மரணத்தையும் அழிவையும் வைத்தே ஆயுத வியாபாரம் நடக்கிறது. உலகின் பெரிய ஆயுத நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் எல்லா ஆயுதங்களும் நன்றாக விற்க வேண்டும் என்றால், அவர்களுக்கு ஒரு போர் தேவை."**



ஒரு போரைப் பேரழிவாகவும் உயிரிழப்பாகவும் எளிய மக்கள் பார்த்துப் பதைபதைக்கின்றனர். கௌரவப் பிரச்சினையாகவும், சண்டையில் ஏதோ ஒரு பக்கம் நிற்க வேண்டிய நெருக்கடி நிலையாகவும் தேசத் தலைவர்கள் கருதித் தூக்கம் தொலைக்கின்றனர். ஆயுத வியாபாரிகளோ, தங்கள் பிசினஸ் சூடுபிடிக்கும் என்று உற்சாகம் அடைகின்றனர்.

மரணத்தையும் அழிவையும் வைத்தே ஆயுத வியாபாரம் நடக்கிறது. உலகின் பெரிய நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் எல்லா ஆயுதங்களும் நன்றாக விற்க வேண்டும் என்றால், அவர்களுக்கு ஒரு போர் தேவை. ஆப்கானிஸ்தானை மையமாக வைத்து தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா நடத்திய போர், ஈராக், சிரியா என்று பல நாடுகளுக்குப் பரவி ஆயுத நிறுவனங்களை வாழ வைத்தது. ஆப்கன் இப்போது தலிபான் கைகளுக்குப் போய்விட்டது.

ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பு காணாமல்போய்விட்டது. ஆபிரிக்க தேசங்களில் நிகழும் உள்நாட்டுப் போர்களால் ஆயுத வியாபாரம் பெரிதாக நடப்பதில்லை.

இந்த அமைதியைக் குலைத்து ஒரு பெரிய போர் நடந்தால்தான் ஆயுதங்களுக்குத் தேவை ஏற்படும். புதிய ஆயுதங்களைப் பரிசோதனை செய்து பார்க்கவும், யார் உருவாக்கிய ஆயுதங்கள் வலிமையானவை என்பதை நிரூபிக்கவும் போரே சரியான வழி.

ஆப்கன் மண்ணிலிருந்து வெளியேறும் முடிவை அமெரிக்கா எடுப்பதற்கு முன்பே, அடுத்த களம் உக்ரைன்தான் என்பது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டே உக்ரைனுக்கு அமெரிக்க நிறுவனங்கள் ஆயுதங்களை விற்க ஒப்புதல் அளித்தார் அப்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப். "இது சமாதான முயற்சிகளைச் சிக்கலாக்கி, ரஷ்ய ஜனாதிபதி புடினை போர்முனைக்குக் கொண்டுவந்து நிறுத்தும்'' என்று அப்போதே பலர் எச்சரித்தனர். ட்ரம்ப் போய் ஜோ பிடன் வந்த பிறகும் இது மாறவில்லை. அமெரிக்க ஏவுகணைகள் அடுக்கடுக்காகப் போய் அங்கே இறங்கியதைப் பார்த்து வெகுண்டார் புடின். விளைவாகப் போர் வந்திருக்கிறது.

உலகின் ஆயுத மார்க்கெட்டைக் கட்டுப்படுத்தும் டொப் 5 நாடுகள், அமெரிக்கா, ரஷ்யா, ஜேர்மனி, சீனா மற்றும் பிரான்ஸ். உலக நாடுகள் பயன்படுத்தும் 75.9 சதவிகித ஆயுதங்களை இவையே சப்ளை செய்கின்றன. இஸ்ரேல், இத்தாலி, தென்கொரியா, ஸ்பெயின் மற்றும் பிரிட்டன் ஆகியவை அடுத்த இடங்களில் இருக்கும் ஐந்து நாடுகள். இவை 14.4 சதவிகித ஆயுதங்களை சப்ளை செய்கின்றன.

இவற்றில் குறிப்பாக அமெரிக்காவும் ரஷ்யாவும் மட்டுமே 57 சதவிகித ஆயுத மார்க்கெட்டை வசப்படுத்தி வைத்துள்ளன. உலகின் டொப் 10 ஆயுத நிறுவனங்களில் அமெரிக்காவில் மட்டுமே ஐந்து உள்ளன.

உலகின் பெரிய ஆயுத நிறுவனமான லாக்ஹீட் மார்ட்டின், டாங்கிகளை அழிக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்குக் கொடுத்திருக்கிறது. பிரிட்டனில் இருக்கும் சாப் நிறுவனம், டாங்கிகளை அழிக்கும் ரொக்கெட் லோஞ்சர்களைக் கொடுத்திருக்கிறது.

ஜேர்மனி, இத்தாலி, துருக்கி போன்ற நாடுகளும் உக்ரைனுக்கு ஆயுதங்களை விற்றிருக்கின்றன. வரலாற்றில் முதல்முறையாக ஐரோப்பிய யூனியன் தன் செலவில் ஆயுதங்களை வாங்கி உக்ரைனுக்குக் கொடுப்பதாக அறிவித்துள்ளது. இயற்கைச் சீற்றங்களின் போது உதவி செய்வதற்காகத் தன்னார்வலர்களை அழைப்பது போல, தங்களுக்காகப் போர் புரிய தன்னார்வலர்களை அழைத்திருக்கிறது உக்ரைன். ஆயுதங்களின் வாசமே அறியாத பலர் போர்க்களத்தில் இப்போது ஆயுத மேந்தி நிற்கிறார்கள். மொத்தத்தில் ஆயுத வியாபாரம் சூடுபிடித்து விட்டது.

இந்தச் சூழலில் சாமர்த்தியமாக இன்னொரு விடயத்தையும் செய்ய நினைக்கிறது அமெரிக்கா. ஒட்டுமொத்தமாக ரஷ்யாவின் ஆயுத வியாபாரத்தை முடக்கி விட்டு, அதைத் தன்வசப்படுத்தும் முயற்சியே அது. போர் விமானங்கள், கவச வாகனங்கள், ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள், எலெக்ட்ரோனிக் போர் அமைப்புகள், ஏவுகணைத் தடுப்பு அமைப்புகள் போன்றவற்றைச் செய்யும் 22 ரஷ்ய நிறுவனங்களுக்கு அமெரிக்கா பல்வேறு தடைகளை விதித்திருக்கிறது.

"இனி புதிதாக ஆயுத விற்பனை செய்வதோ, ஏற்கனவே விற்ற ஆயுதங்களுக்குப் பராமரிப்புப் பணி செய்வதோ இனி இந்த நிறுவனங்களுக்குக் கடினமாக இருக்கும்" என்கிறது அமெரிக்கா.

ரஷ்யாவுக்குப் பெரும் வருமானத்தைத் தருவது ஆயுத ஏற்றுமதி பிசினஸ்தான். அவர்கள் பெரிதாக மேற்கத்தேயத் தொழில்நுட்பங்களை நம்பி இல்லை. அதனால் இந்தத் தடை தங்களை ஒன்றும் செய்யாது என்கிறார்கள் அவர்கள்.

தாக்குதல்களைத் தாங்கி நிற்கும் அளவுக்கு வலிமையான போர் வாகனங்களைச் செய்வதற்கான மெட்டலர்ஜி நுட்பம், சென்சார் மற்றும் ரேடார் டெக்னோலஜி போன்றவற்றில் அமெரிக்காவைவிட ரஷ்யா சிறப்பாக உள்ளது. காஷ்மீரின் உறைபனிச் சூழலிலும், அரேபியாவின் தகிக்கும் பாலைவனத்திலும் தடையில்லாமல் இயங்கும்.

விலையும் குறைவு. அதனாலேயே ரஷ்யப் போர்க்கருவிகள் பலராலும் விரும்பப்படுகின்றன. இந்தியா, சீனா, எகிப்து, அல்ஜீரியா, வியட்நாம், ஈரான், லத்தீன் அமெரிக்க நாடுகள் போன்றவை ரஷ்ய ஆயுதங்களை அதிகம் பயன்படுத்துகின்றன.

ரஷ்யாவின் S-400 ஏவுகணைத் தடுப்பு அமைப்பை இந்தியா வாங்கியுள்ளது. அடுத்து ஏ.கே 203 துப்பாக்கிகளை ரஷ்யாவும் இந்தியாவும் இணைந்து இந்தியாவில் தயாரிக்கவுள்ளன.

உலகின் மிக வேகமான ஏவுகணையாகக் கருதப்படும் இந்தியாவின் பிரமோஸ் ஏவுகணையை மேம்படுத்த ரஷ்யா உதவி செய்யவுள்ளது. அமெரிக்காவின் தடை இந்தத் திட்டங்களை என்ன செய்யப் போகிறது என்று தெரியவில்லை.

இரண்டாம் உலகப்போர் நடந்த நேரத்தில்தான் அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பெரிய ஆயுத நிறுவனங்கள் உருவாகின. போர் முடிந்ததும் அமெரிக்க ஜனாதிபதியான ஐசன்ஹோவர், "எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் பெரும் ஆயுத நிறுவனங்களை வளர்த்துவிட்டோம்.

அவை அகோரப்பசியுடன் இயங்குகின்றன. முடிவில்லாத போர்களே தங்களுக்குக் கொழுத்த இலாபம் கொடுக்கும் என்று அவை நினைக்கின்றன. அவற்றின் அதிகார வேட்டை, ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாக மாறும்" என்று எச்சரித்தார்.

அது நிஜம் என்பதை ஒவ்வொரு போரும் நிரூபிக்கிறது.

ஜூனியர் விகடன்

Digitized By Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## மூன்று மோதிரங்கள்



தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்தின் மீதேறி அதில் தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் கீழே இறங்கி அதனைச் சுமந்து கொண்டு மயானத்தை நோக்கி செல்கையில் அதனுள்ளிருந்த வேதாளம் எள்ளி நகைத்து "மன்னனே! நீ இந்தப் பயங்கர இரவில் ஏனோ இப்படி விடாப்பிடியாய் இந்த செயலில் இறங்கி இருக்கிறாய். நீயோ இதை நிறுத்தப் போவதில்லை. எனவே உனக்குச் சிரமம் தெரியாதிருக்க லதாங்கி என்ற அரசகுமாரியின் கதையைக் கூறுகிறேன். கவனமாகக் கேள்" என்று கூறிக் கதை சொல்ல ஆரம்பித்தது.

ஜெயபுர நாட்டின் ஒரு மலைச் சரிவில் ஒரு சிறு கிராமத்தில் கேசவன், மாதவன், கோவிந்தன், என்ற மூன்று ராஜபுத்திர இளைஞர்கள் இருந்தார்கள். மூவரும் பிரியாமல் எங்கு சென்றாலும் ஒன்றாகவே செல்வது வழக்கம். ஒரு நாள் மாலை மூவ ரும் ஒரு ஆலயத்தில் கூடினார்கள். அப்போது கேசவன் "நம் பெற்றோர் நமக்கு எந்த வேலையும் கொடுப்பதில்லை. வேளாவேளைக்குச் சாப்பிட்டு விட்டு சும்மா இருக்கப் பிடிக்கவே இல்லை. ஏதாவது உபயோகமான வேலையை நாம் செய்ய வேண்டும்" என்றான். அப்போது கோவில் குருக்கள் அவர்களுக்கு பிரசாதம் கொடுக்க வந்தார். அவர் அம் மூவரும் பேசியதைக் கேட்டு கொண்டிருந்தார்.

அவர், "நீங்கள் மூவரும் நினைப்பது சரியே. அறிவை நல்வழியில் பயன்படுத்தாவிட்டால் அது கெட்டு விடும். சுயநலம் கருதாமல் பிறருக்கு பயன்படும்படி செய்யும் செயலே மகத்தானது.

இங்கே அருகிலுள்ள காட்டில் ஒரு புலி இருந்து மக்களைக் கொன்றும் பயமுறுத்தியும் வருகிறது. அதைக் கொன்று சுற்றுப்புற கிராம மக்களுக்கு நன்மை புரியுங்கள்" என்றார்.

மூவரும் "இதுதானா? இன்றே அதைக் கொன்று வருகிறோம்" எனக் கூறி மறுநாள் காட்டை நோக்கிச் சென்றார்கள். மத்தியானம் வரை அவர்கள் புலியைத் தேடியும் அது அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் பசியை தணித்துக் கொள்ள அங்கு கிடைத்த கிழங்குகளையும் பழங்களையும் சாப்பிட்டார்கள். அருகே ஓடிக் கொண்டிருந்த ஆற்று நீரை அள்ளிப் பருகினார்கள். அப்போது அருகிலிருந்த மலைக் குகையிலிருந்து யாரோ அலறும் சத்தம் கேட்டது .

அவர்கள் மூவரும் குகையை நோக்கி ஓடினார்கள். அப்போது ஒரு பெரிய பாம்பு சீறிக் கொண்டு அக்குகையிலிருந்து வெளியே வந்தது. மூவரும் தம் வாள்களை உருவி அதனைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்டார்கள். அப்போது குகைக்குள் யாரோ ஒரு மனிதன் முனகிக் கொண்டிருப்பதைக் கேட்டு அவர்கள் அந்த குகைக்குள் சென்றார்கள். அங்கு ஒரு சாது துடி துடித்து உயிர்போகும் நிலையில் இருப்பதை அவர்கள் கண்டார்கள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்

40



ஒரே நாளில் விறுவிறுப்பான நிகழ்ச்சிகள் பரபரப்பாய் நடந்து முடிந்தன. அடுத்த நாள் நடக்க இருக்கும் முடிசூட்டும் விழாவைப் பற்றிய செய்திகள் இறக்கைகள் கொண்டு பறந்தன; நாடறியச் செய்தனர். அயோத்தி மாநகர் இந்திரன் பொன்னகர் எனப் பொலிவு பெற்றது.

திக்கு எட்டும் செய்தி பரவியது; திசைகள் எட்டிலும் இருந்து மக்களும் மன்னரும் வந்து குழுமினர்; வள்ளுவன் என்னும் செய்தி பரப்புவோன் யானை மீது ஏறி ஊரறியச் செய்தான்.

"இராமன் நாளையே முடி சூடுகிறான்" என்ற செய்தியைப் பரப்பினான்; மக்கள் களிப்பில் மூழ்கினர். வாழை மரங்கள் இடம் பெயர்ந்தன, கமுக மரங்கள் அழகு செய்தன; முத்துமாலை கள் ஒளி வீசின, பொற்குடங்கள் பொலிவு ஊட்டின.

### மந்தரை குறுக்கீடு

ஊரே உவகையுள் ஆழ்ந்தது; மலர்ந்த பூக்களைக் காண முடிந்ததே அன்றிக் குவிந்த மலர் ஒன்றுகூட இல்லை; ஒரே ஒரு ஜீவன் மட்டும் புழுக்கத்தால் மனம் அழுங்கிக் கொண்டது. அவள் முதுகு கூனிக் குறுகி இருந்தது. அந்த ஊனம் அவள் மனத்திலும் ஏற்பட்டது. "மணி முடி" என்றதும் "யாருக்கு?" என்ற வினாவை எழுப்பினாள்.

"இராமனுக்கு; அவன் இந்நாட்டுக் கோமகன்!" என்றனர். உண்டை வில்லால் இராமன் சிறு வயதில் தன் முதுகைக் குறி பார்த்து அடித்த பண் டைய நிகழ்ச்சி ஒன்று அவள் நினைவிற்கு வந்தது. "கிறுக்கனுக்கா இந்தத் தருக்கு மிக்க வாழ்க்கை?" என்று அழுக்காறு கொண்டாள்.

கேகயன் மகள் அவளுக்கு மிகவும் வேண்டியவள்; அவள் தோழிகளில் இவள் மிகவும் நெருங்கியவள்; மனம் சுருங்கிய இவள், அவள் மருங்கு சென்றாள்.

காய்ச்சிய பாலில் ஒரு புரைத்துளி கலந்தால் அது தயிராகிறது; இனிப்பு புளிப்பாக மாறுகிறது. 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்பது அவளுக்குத் தெரியும். பெண் மனம் என்பது என்ன என்பதை நன்கு அறிந்தவள். 'மகனுக்காகக் கட்டிய கணவனை உருட்டி விடுபவள் பெண்' என் பதை அறிந்தவள்; கணவன் துணை; மகன் அவள் உயிர்; பாசம்; கணவன் இறந்த காலம்; மகன் எதிர்காலம். பழைமையை நினை த்துத் தன் கிழமையை உதறித் தள்ளமாட்டாள். தாய்மை என்பது பெண்ணின் பெருமை; ஆனால் அதுவே அவள் வீழ்ச்சிக்குத் துணைமை என்பதையும் உணர்ந்தவள். 'பாசம்' என்பது நெஞ்சைப் பசையற்றதாக ஆக்க வல்லது' என்பதை அவள் அறிவாள்; பாரம் பரியப் பற்று வாரிசு நியமனம் மாமேதைகளுக்கும் வீழ்ச்சியைத் தரும் என்பதை அவள் அறிவாள்.

பிறந்த வீட்டுப் பாசத்தைத் தூண்டிவிட்டால் அது சுடர் விளக்காக எரியும்; அவள் மனம் திரியும்; கணவனை விட்டுப் பிரிக்கும் என்பது அவளுக்குத் தெரியும். கேகயன் மகளைவிட இவள் வயதில் மூத்தவள்; அதனால், முதிர்ந்த அறிவுடையவள்; அவள் உதிர்க்கும் சொற்களை அவள் தோழி விதிர்க்க மாட்டாள்; அவள் கூரிய அறிவு நிரம்பியவளாய் இருந்தாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராஜதந்திரம் என்றால் எப்படிப்பட்டது என்று புரியவில்லையே?

**சுதன் — குப்பிழான்**

**ஆட்சியாளர்கள் வாக்குக்கேட்டு வந்தால் தும்புத்தடி தூக்குவோம் என சிங்கள மக்கள் கூறியிருக்கிறார்களே, அவர்களிடம் துவக்கு இருப்பதை மறந்து விட்டார்களோ?**

அவை துவக்குத் தூக்கி வெருட்டுறது தமிழ் மக்களைத்தானே.
சிங்களவர்களிடம் துவக்கை நீட்டினால் அதன் விளைவு வேறாக இருக்கும் என்பது அவர்களுக்கு தெரியும்.
தமிழர்கள் மீது துவக்கை நீட்ட, தமிழ் மக்கள் அதை எதிர்க்க, பயங்கரவாதிகள் என்று உள்ளே போட, அதற்கு ஒரு எதிர்ப்புப்போராட்டம் நடக்க, அதில் பங்கு கொண்டவர்களை படம் எடுத்து வெருட்ட, இப்படி சும்மா சுர் எண்டு நிப்பினம்.
இந்த வாலுகளை அங்க ஆட்ட முடியாது தம்பி.

**மதுவன் — மீசாலை**

**அடங்காப்பிடாரியை கணவனால் எப்படி அடக்க முடியும் வியாசரே?**

வீட்டு வேலைகளை தாம்தூம் என்று செய்ய வேண்டும். அதாவது, சமையல் செய்து அசத்த வேண்டும், துணி துவைத்து காய வைத்து அயன் பண்ணி அதை அழகாய் மடித்து வைத்துக் காட்ட வேண்டும்.
செத்தல் மிளகாயை தும்மாமல், இருமாமல் வறுத்து பின் தூள் திரிக்க வேண்டும்.
வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு விதவிதமாய் சமையல் செய்து நிலை குலைய வைக்க வேண்டும்.
இவை அனைத்தையும் கணவனே செய்ய வேண்டும்.
அப்படிச் செய்தால் அடங்காப்பிடாரி கூட அடங்கி எமக்குப் பயந்து நடப்பாள். இது சத்தியம்.
(சத்தியமா சொந்த அனுபவம் இல்லை)

**நிலக்ஷன் — வவுனியா**

**உணவுப்பொருட்களின் விலை இப்படி ஏறினால் என்னத்தை செய்து விட முடியும் வியாசரே?**

“இப்படியே போனாக்கா பூச்சி இங்கே வாழும்டா, புழுவும் இங்கே வாழும்டா, மனிசப் பயல் இனம் மட்டும் மண்ணாகிப் போகும்டா” என்ற அருமையான வரிகள் நிறைந்த பாடல் உங்கள் கேள்வியை வாசிக்கும் போது ஒலித்தது. கண்களின் ஓரம் கண்ணீரால் நனைந்தது.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சாயா — யாழ்ப்பாணம்**

**தோழரே! காதலன் கண்ணோடு கண் வைத்துப் பார்த்தால் புதுவித உணர்வு தோன்றுமாமே உண்மையா?**

ஓ…! அப்படியா. சத்தியமா அந்தக் கறுமத்தைப்பற்றி எனக்குத் தெரியாது.
எனக்கு இருக்கும் புதுவித அனுபவங்கள் என்னவெனில்,
காலையில் எழுந்தவுடன் தேநீர் குடிக்க வேண்டும் போன்ற உணர்வு இருக்கும்.
மதியம் சாப்பிட வேண்டும் போல உணர்வு இருக்கும்.
இவை எல்லாவற்றையும் தாண்டி அடுத்த வீட்டில் வைக்கும் கோழிக் குழம்பு வாசனையை முகர்ந்தால் ஆஹா ஓஹோ என்ற உணர்வு இருக்கும்.
அதைவிட வேறு எந்த நாசமறுப்பும் நமக்கு ஏற்படவில்லையம்மா.

**மகேஸ்வரன் — வரணி**

**அமைச்சர்களின் வடக்கிற்கான திடீர் விண்வெளிப்பயணம் எதற்காக ஐயா?**

தெற்கிற்கு செல்ல முடியாது. சிங்கள மக்கள் செமக் கடுப்பில் இருக்கிறார்கள்.
வீட்டுப் பக்கம் வந்தால் தும்புத்தடி தான் பதில் சொல்லும் எண்டுபோட்டுதுகள்.
அப்ப வடக்கிற்கு சும்மா ஒரு ரூர் போட்டு வந்தால் மனதிற்கு ஆறுதலாக இருக்கும்.
அதோட, இல்லாதது பொல்லாததுகளையெல்லாம் சும்மா அடிச்சு விடலாம்.
தமிழ் மக்கள் தானே நாம் சொன்னதை நம்பிடுங்கள் எங்கிற நம்பிக்கை தான். எங்கட வீடுகளிலையும் தும்புத்தடி இருக்குது காணும்.



உணவுப்பொருட்களின் விலை இப்படி ஏறினால் என்னத்தை செய்து விட முடியும் வியாசரே?

**சிவன் — வதிரி**

**ஐயா வியாசரே! அரை லீற்றர் பெற்றோல் இருந்தால் தருவீர்களா? ரொம்பக் கஷ்டமா இருக்கு பிளீஸ்?**

பிச்சை எடுத்ததாம் பெருமாள், அதைப் பிடிங்கித்தின்னுதாம் அனுமான் என்ற கதை போல் இருக்கிறதே இது.
இனி பெற்றோல் அடித்து மோட்டார் சைக்கிள் ஓடுவதென்பதெல்லாம் சரி வராது தம்பி.
அதனால் அனைவரும் சைக்கிளுக்கு மாறுவோம். இல்லாவிட்டால் மூலிகைப் பெற்றோல் கண்டு பிடிக்கும் முயற்சியில் இறங்குவோம்.
இதை விட்டு விட்டு பெற்றோல் கேட்டு வீட்டுப் பக்கம் வந்தால் நாய் தான் பதில் சொல்லும்.
மன்னிக்கவும் அதுவும் உணவு இன்றி நடக்க இயலாமல் இருக்கிறது.

**தயா — மிருசுவில்**

**மனிதர்கள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்..?**

கே.கே.எஸ். வீதியில் இருக்கும் ஒரு பிரமுகர் பெயர் கொண்ட ஒரு நிறுவனம் வேலைக்கு ஆட்களை எடுத்திருந்தது.
திருமணமானவர்களுக்கு இங்க வேலை இல்லை என்பதுதானாம் அவரின் முதல் கன்டிசன்.
ஏன் எனக்கேட்டால் திருமணம் ஆனவர்களிடம் பொறுப்பு இருக்காதாம் அடிக்கடி லீவு எடுப்பார்களாம்.
அப்ப தம்பிக்கு திருமணமாச்சோ என்று கேட்டால் அதற்கு ஓமாம்.
அப்படியெண்டால் தம்பிட்டையும் பொறுப்பிருக்காது போல எண்டு தொலைபேசியைத் துண்டித்து மூண்டு மாசத்திலை அந்தக் கடை முடிக்கிடக்கு.
இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள் தானே.

**அருட்கதிர் — துன்னாலை**

**இராஜதந்திரம் என்றால் எப்படிப்பட்டது என்று புரியவில்லையே?**

தமிழ்த் தலைவர்களுக்கு சரியான இராஜதந்திரம் தெரிந்திருந்தால் எப்போதோ தமிழினத்திற்கு விடிவு கிடைத்திருக்கும்.
இப்போது கூட ஜனாதிபதி அழைத்தவுடன் செல்வதற்கு தயாராகிறார்கள்.
ஆனால் அந்தச் சந்திப்பில் எமக்கான தீர்வுகளை இறுக்கமாய் கேட்க ஆள் இல்லையே.
ஏதோ போனோமா, குசன் சீற்றிலை இருந்தோமா, ஆளாளுக்குப் பார்த்து சிரித்தோமா, போட்டோக்கு போஸ் கொடுத்தோமா, வெளியிலை வந்து மைக் முன்னாடி விளாசினோமா என்றதுடன் முடிந்து விடுகிறது எம்மவர்களின் இராஜதந்திரம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உருவாக்கியவர் உருக்குலைய

கருவாய் உருவாய் வயிற்றறையில் ஏந்தி
ஐயிரண்டு மாதங்களில் வலி மிகவுற்று
ரோஜாவாய் ஈன்றெடுத்தவள்
பிஞ்சுப் பாதம் ஆடும் போதும்
குருத்துக் கைகள் அசையும் வேளையும்
பூப்போல வருடி மகிழ்வு கண்டவள்
குதலைக் குரலில் சிணுங்கல் கண்டு
அள்ளி அரவணைத்து பாலூட்டியவள்
தவழ்ந்து தனித்து தத்தக்க பித்தக்க
நடைபோட்ட போதெல்லாம்
ஆனந்தம் மிகக் கொண்டவள்
சுட்டித்தனமாய் குறும்புகள்
செய்வதை ரசித்து ரசித்து
செல்லமே என்று ஆரத்தழுவியவள்
பாலர் கல்வி, ஆரம்பக் கல்வியென
வகுப்பு ஒவ்வொன்றிலும் உயர்ந்து
கலாசாலை பட்டதாரியான போது
அந்த அன்னையின் பூரிப்பு
வார்த்தைகளுக்குள் அடங்காதது
படிப்புக்கேற்ற பதவியிலமர்ந்து
மண வாழ்க்கையிலும் புகுந்தபோது
புளகாங்கிதத்தின் உச்சமானாள்
ஆனால் இன்று...
நரை திரையென கிழண்டி
கணவனுடன் இவளும் கவனிப்பாரின்றி...
ஓ பிள்ளைகளே ஒரு கணம் பின்னால்
திரும்பி நின்று சிந்தியுங்கள்
நாளை நீங்களும் வயோதிபராவீர்கள்

பையில் வையுங்கள் பொருட்களை
தொய்வாக எண்ண வேண்டாம்
மேய் வருந்தக் கூலிதரும்

தி.இ.அன்புதுரை,
சம்மட்டியோலை, மானிப்பாய்.

## வேண்டாம் பொலித்தீன் வேண்டுக புதிய முறைமை



புதைத்தால் உக்காத பொலித்தீன்
காட்டாக எரித்தால் தவறு
மாட்சிமை வளி மாசடையும்
மீட்போம் சூழல் மேம்பாடு

சேகரிப்போம் பொலித்தீன்
உரியவரிடம் கொடுப்போம்
கரிய நிறத்திலே மீள் சுழற்சி பொருட்கள்
சீரிய நிறம் கரிய நிறம்

கையில் பையுடன் வெளியே செல்லுங்கள்
பையில் வையுங்கள் பொருட்களை
தொய்வாக எண்ண வேண்டாம்
மேய் வருந்தக் கூலிதரும்

சிறு பொருள் வாங்கினாலும்
மளிகைக் கடையில் பெருமையாக தருவார்கள்
பொலித்தீன் பை
பெருமையாய் நிராகரித்து விடுங்கள்

சி.குமாரலிங்கம்,
செம்மண் வீதி, நல்லூர்.

## ஒரு முறை...

கட்டியணைத்துப் பாருங்கள்
ஏடுகள் எரியாமல்
நிறுத்தி நிதானித்துப்
பாருங்கள்
கயவன் உங்கள்
கையினுள் துயில்கிறான்.
புன்னகைத்துப் பாருங்கள்
நாளைய சடலங்களை
புதைக்கத் தேவையில்லை
யோசித்துப் பாருங்கள்
செவ்வாயிலும் வீடிருக்கிறது.
தேடிப் பாருங்கள் இதயங்கள்
திருடுபோய் விட்டன.
பரீட்சித்துப் பாருங்கள்
பேனாக்களும்
கூர்மையானவை.
எண்ணிப் பாருங்கள்
தீக்குச்சிக்கே
ஒட்சிசன் இல்லை
றொக்கெட்டுக்கள்
தேவையா?

நவாலி,
பிரியன்.

## மௌனத்தின் தேடல்- 553



## அவல வாழ்வு அகன்றிடாதா

மண்ணெண்ணெய்
குப்பி விளக்குகளையே
மகிழ்வோடு நம்பி
வாழ்ந்த காலம் அன்று
மின் விளக்குகளையோ
குப்பி விளக்குகளையோ
நம்பி வாழ்ந்திடவும்
முடியாததொரு மனித
அவல வாழ்க்கை இன்றாகி விட்டதே!

தங்கத்தமிழன்,
காரைநகர்.

## மௌனத்தின் தேடல்- 554



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## அத்தனையும் எரிகிறதே!

உணவு விலை உயர்வால்
பசி வயிறு எரிகிறது
எரிபொருள் இல்லை
இயல்பு வாழ்வு எரிகிறது
மின்வெட்டுத் தீப்பொறியால்
மிகு வளமும் எரிகிறது
அறம் பிழைத்த அரசாலே
அத்தனையும் எரிகிறதே!

வைகதன்,
கொக்குவில்.

## கை விளக்குக்கு...

கிராமங்கள் தோறும்
படலைக்குப் படலை நின்று
மணி அடித்து மண்ணெண்ணெய்
வண்டில் குடிசைகள் ஒளிர
கைவிளக்குக்கு உயிரூட்டும்
கடந்த கால பசுமை நினைவு
இன்றும் மனசு குளிர்கிறது

வானிசன்,
நல்லூர்.

## காலச்சக்கரம்

இயந்திர உழைப்பு மேலோங்கி
மனித உழைப்பு எம்மை
விட்டு மலை ஏறி விட்டதுவோ
இக்காலம் ஏற்றமிகு விலையில்
கைக்கு எட்டா எரிபொருட்கள்
மீண்டும் மாட்டு வண்டி என்ன
குதிரை வண்டியும் தலைகாட்ட
வேண்டிய காலம் மிக அருகில்
எண்ணெய்க் குதம் தீப்பற்றி
எரிகின்றதே ஒரு யுத்த
தேசத்திலே ஆண்டவன் தீர்ப்பு
அது என்றால் யார் தான்
என்ன செய்ய முடியுயும்?

எஸ்.உமாசிவம்,
ஏழாலை மேற்கு.

## கழியும் வயதில்

கெந்தியோடும் வயதெல்லாம்
கழின்றதடா!
கை கொண்ட வீரியம்
குறையவில்லை-பொழுதில்!
அஞ்சி நடமாடும்
உன்பாதம் சுமை கண்டதோ!
என் முதுமை உன்னை
பற்றியதால்-தொய்யாத
உன் உறவால்-வழியெங்கும்
வியாபாரம்-உன் பலம் செய்த
கடமை என்னை வஞ்சிக்குமோ!

சு.சுருத்திகா,
யா/யா.இ.ம.க.

## பொருளாதார வீழ்ச்சி

கொடிய நோய் உலகை வாட்ட
உலக நாடுகள் போரில் மூழ்க
பொருட்களின் விலை
மலையை முட்ட
பொருளாதாரம் மடுவாக மாற
மாடு கொண்டு வண்டி பூட்டி
எரிபொருள் வாங்க சென்றீரோ
ஓடமும் ஒரு நாள்
வண்டியில் ஏறும்
வண்டியும் ஒருநாள்
ஓடத்தில் ஏறும்

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**தனக்கே தெரியாமல் ஒருத்தி தன்னை இங்கே அழைத்து வந்திருக்கிறாளோ என்றெண்ணியவாறு மாஸ்டரைக் கூர்ந்து பார்த்தான். அவர் மிகச் சாதாரணமாகக் கதிரை யைக் கண்களால் சிக்னல் போட்டுக் காண்பித்து, அமருமாறு கூறினார்.**

## வலி சொல்லும் தொடர்... 24




ராதாவின் தோள்களில் கையைப் போட்டு அவனை தன்னுடன் நெருக்கிக் கொண்டான் நீதன்.

பொலிஸ் வாகனத்தின் கடற்கரைப் பக்க ஜன்னல் கண்ணாடி சாதுவாக கீழே இறங்கியதை ஒரு கண்ணால் பார்த்தான். பொலிஸ் வாகனம் அசையவில்லை.

அவளைப் போலவே அந்தச் சம்பவம் பொலிஸுக்கும் பிடித்திருக்கவில்லை. இப்போது மறுபக்க சிக்னல் விழுந்தது. மெதுவாக அசைந்து கொண்டு கடற்கரை வீதியால் அந்த வாகனம் வேகமெடுத்தது.

ராதாவுக்குள் அந்தக் கடற்கரைக் காற்றை மீறியொரு உஷ்ணம் சுழன்றடித்தது.

என்னதான் போராளி என்றாலும், அவளின் பெண்மையின் மீது ஒருவன் அத்துமீறியதையும் அதற்குரிய எதிர்ப்பைத் தன்னால் காண்பிக்க முடியாமல் போனதையும் தனது தோல்வியாகவே அவள் கருதினாள்.

ஆத்திரம் அலைகளாக ஓங்கியடித்தது. நீதனைத் திரும்பிப் பார்க்காமலேயே, தூரத்தில் போய்க் கொண்டிருந்த பொலிஸ் வாகனத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவள் கோபத்தோடு இருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு அந்தக் கணத்தில் நீதனுக்குப் புலனாய்வுத்துறைக்காரன் என்ற தகுதியெல்லாம் தேவையற்றதாக இருந்தது. அவள் பெண்ணாகத்தான் இன்னுமிருக்கிறாள் என்பதைப் பரிபூரணமாக உணர்ந்து கொண்டவன், சமரசத்துக்கான எந்த சம்பாஷணையையும் அந்த இடத்தில் தவிர்த்துக் கொண்டான்.

"வீட்ட கொண்டுபோய் விடுறீங்களா?"

ராதா தங்க வைக்கப்பட்டிருந்த வீடு அமைந்திருந்த தெருமுனையிலிருந்த குழாயடியில் இறக்கி விட்டு, தலைக்கவசத்தை வாங்கி மோட்டார் சைக்கிளில் கொழுவிய நீதன், வெள்ளவத்தையை நோக்கித் திரும்பினான்.

அடுத்த நாள், கானகனிடமிருந்து அழைப்பு வந்தது.

"பெரியம்மாவுக்கு சுகமில்லையாம். அம்மா ஒருக்கா வந்திட்டு போகட்டுமாம்" என்றான்.

சங்கேத உரையாடலைப் புரிந்து கொண்ட நீதன், கொழும்புப் பொறுப்புகளையும் போக வேண்டிய பாதையையும் கிளியர் பண்ணிக்கொண்டு கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்டான்.

வன்னியைச் சென்றடையும்போது மாலை ஐந்தரை மணியாகி விட்டிருந்தது. போரையும் அதன் வெம்மையையும் மீறிய தனது மண்ணின் மக்களைக் கண் குளிரக் கண்டவாறு, உற்சாகத்தோடு பறந்து சென்ற நீதன், கிளிநொச்சி அலுவலகத்தை அடைந்தபோது, கொஞ்சம் இருட்டியிருந்தது.

உள்ளே நுழையவும் அங்கு ஏற்கனவே ராதா இருந்து கொண்டிருந்ததைப் பார்த்து ஒரு கணம் துணுக்குற்றவன்,

தனக்கே தெரியாமல் ஒருத்தி தன்னை இங்கே அழைத்து வந்திருக்கிறாளோ என்றெண்ணியவாறு மாஸ்டரைக் கூர்ந்து பார்த்தான். அவர் மிகச் சாதாரணமாகக் கதிரையைக் கண்களால் சிக்னல் போட்டுக் காண்பித்து, அமருமாறு கூறினார்.

ராதா அறையிலிருந்து வெளியேறினாள். நீதன் கடைசியாக கொழும்பு - கல்கிஸையில் இறக்கிவிட்டபோது போட்டிருந்த அதே சட்டையுடன்தான் ராதா இங்கேயும் இருந்தாள்.

மாஸ்டரையே அந்த அறையில் கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த நீதனுக்கு ஏதோ ஒரு வகையில் அந்தச் சட்டையும் நிறமும் மங்கலாகத் தெரிந்து போனது. அதை விடவும், தன்னைப் பற்றி எவ்வளவு அழகாக ஒரு முறைப்பாட்டை அலங்கரித்திருப்பாள் என்பதைக் கேட்கின்ற ஆவலோடு மாஸ்டரின் முகத்தைப் பார்த்தான் நீதன்.

அன்றுதான் அவன் ராதாவைக் கடைசியாகக் கண்டிருந்தான். அதன் பின்னர் அவள் புலனாய்வுத்துறையிலிருந்து அரசியல் துறைக்கு மாற்றலாகியிருப்பதாகக் கானகன் பிறகொரு தடவை பேசும்போது கூறியதாக ஞாபகம். அதன் பிறகு யாரோ ஒரு தளபதியைத் திருமணம் செய்து விட்டாள் என்றும் அறிந்திருந்தான்.

யுத்தம் கழுத்தை இறுக்கத் தொடங்கியிருந்த காலப்பகுதியில், இவை தொடர்பாக விரிவாகப் பேசுவதற்கு எந்த அவகாசமும் அவனுக்குக் கிடைக்கவில்லை.

கொழும்புக்கு திரும்பிய நீதனுக்கு, கிளிநொச்சியுடனான தொடர்பு குறைந்து கொண்டு போனது.

வன்னியிலிருந்து கிடைக்கப் பெறும் கட்டளைகளுக்கான இடங்களும் மாற்றலாகத் தொடங்கியிருந்தன. நீதன், தானே முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் கொழும்பு நிலைமைகளை கவனித்துக் கொண்டிருந்தான்.

வன்னியின் மேற்குப் பகுதியைக் கவ்வியிருந்த யுத்தம், கொஞ்சம் கொஞ்சமாக அகலக்கால் பதித்து, ஆழிக்கால் பதிக்கவும் ஆரம்பித்தது.

கொழும்பிலும், தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பணிகளிலிருந்த பல நூற்றுக்கணக்கான புலனாய்வுத்துறைப் போராளிகள் வெளிநாடுகளுக்குப் பறக்கத் தொடங்கினர். வன்னியில் நிலைமை கைமீறிக் கொண்டிருந்தது.

ஒருநாள், கானகனைக் கொச்சிக்கடை பகுதியில் வைத்து ரகசியமாக சந்தித்து, கண நேரம் பேசினான் நீதன். "அவரவர் உயிரைக் காப்பாற்றுவதைத் தவிர, வேறு எந்த வழியும் இல்லை" என்றான் கானகன்.

"அங்கயிருந்து கேள்விப்படுகிற தகவல் அவ்வளவு நல்லதாக இல்லை அண்ணே" என்று கூறிக் கொண்டு நிலத்தை வெறித்தான்.

நீதனால் எதையும் ஆரோக்கியமாகச் சிந்திக்க முடியவில்லை. வன்னியோடு தொடர்பெடுத்தாலும் கூட யாரோடு பேசுவது, எதைக் கேட்பது என்பது அடுத்த பிரச்சினையாக இருந்தது. எல்லோரையும் போல தானும் இரண்டாறு மாதங்கள் மலேசியா பக்கம் போயிருந்து விட்டு, நிலைமையைப் பார்த்துத் திரும்பி வரலாமா? என்று யோசித்தான் நீதன். புறக்கோட்டைப் பக்கமாக உள்ள ஏஜென்ட்டிடம் அன்றிரவே போனான்.

மலேசியா வந்த இரண்டொரு வாரங்களுக்குள் வன்னியின் நிலைமை இன்னும் மோசமடைந்திருந்தது. "கிளிநொச்சி" என்ற பெயர்க் கல்லுக்கு முன்னால் இராணுவத்தினர் கூட்டமாகச் சிரித்துக் கொண்டு நின்று எடுத்த படங்கள் எல்லாச் செய்தி இணையங்களிலும் வெளியாகியிருந்தன.

தாங்கள் எல்லாவற்றையும் இழந்து, தற்போது தனியாக ஒரு பக்கத்துக்கு ஒதுக்கப்படுவதை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று நீதனின் மனதுக்கு, அவனது மூளை அறிவுரை சொன்னது. இப்போதெல்லாம் பொறுமையை அதிகம் கற்றுக் கொள்வதற்கான பயற்சியை, சூழ்நிலை அவனுக்குக் கூர்மையாக உணர்த்தியது.

கொழும்பின் பட்டி தொட்டியெங்கும் பறந்து திரிந்த நீதனுக்கு ஒரு பெட்டி வீட்டுக்குள் அடைந்து கிடந்து, கொடூரமான செய்திகளோடு வாழ்க்கை நடந்துவது பெரும் போராட்டமாகவிருந்தது.

மரணத்தை அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அறிமுகம் செய்து வைப்பது போன்ற உணர்வை அது கொடுத்தது.

சுதந்திரத்தின் அருமை இன்னும் இன்னும் கொடூரமாகத் தெரிந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## அசைந்த சிலை?




அத்துடன் அந்த மாபெரும் செல்வத்தைத் தன்னுடையதாக்கிக் கொள்ள வேண்டுமென்ற ஆசையால் வெறிமிகுந்த பார்வையொன்றையும் அவற்றின் மீது உலாவ விட்டான்.

அவன் பார்வையையும், முகத்தில் ஓடிய சிந்தனைக் குறிகளையும் விடாமல் பார்த்துக் கொண்டு நின்ற இளைய பல்லவன், சற்றுத் தைரியத்துடன் கோட்டைத் தலைவனை முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, "தலைவரே! எனது நட்பில் லாபமிருப்பதைப் புரிந்து கொண்டீரல்லவா?" என்று வினவினான் ஏளனம் கலந்த இளநகையுடன்.

கோட்டைத் தலைவன் தலை தூக்கி அவனைப் பார்த்தாலும் அவன் கண்கள் எதிரேயிருப்பவனை ஆராயும் சக்தியை இழந்திருந்தனவாகையால் இளைய பல்லவனின் இதழ்களில் தவழ்ந்த இளநகையையோ ஏளனத்தையோ அவை கவனிக்கவில்லை. ஏதோ சொப்பனத்திலிருப்பவன் குரலில் கேட்டான் கோட்டைத் தலைவன், "உமது நட்பில் என்ன பலன் இருக்கிறது? " என்று.

"உமது கைகளிலிருப்பதே போதிய பலனல்லவா?" என்று மெல்ல வினவினான் இளையபல்லவன்.

இளையபல்லவன் கேள்வியில் எத்தகைய பதற்றமோ இகழ்ச்சியோ இல்லாவிட்டாலும், அதைக் கேட்ட கோட்டைத் தலைவன் ஏதோ விஷக்கடி பட்டவன் போல் துள்ளி ஆசனத்தில் உட்கார்ந்தான். "என்ன? இன்னொரு முறை சொல்லுங்கள்?" என்று வினவினான் அவரச அவசரமாக.

"உங்கள் கையிலிருப்பதே போதிய பலனல்லவா என்றேன்!" என்று கேள்வியை மீண்டும் திருப்பிச் சொன்னான் இளையபல்லவன்.

"அப்படியானால்.. .?" மென்று சிரமப்பட்டு மீதி வார்த்தைகளை விழுங்கினான் கோட்டைத் தலைவன்.

"முத்துகள் உங்களுக்கு நான் அளிக்கும் பரிசு." சாதாரண தானமளிப்பவன் போல் பதில் சொன்னான் இளையபல்லவன்.

"உண்மையாகவா?"

ஆம்.

"நான்குமா!"

ஆம்.

- "இவற்றின் மதிப்பு உமக்குத் தெரியுமா?"

"முத்துகள் கொழிக்கும், முத்துகள் எடுக்கும் தமிழகத்தில் பிறந்தவன் நான். "இவை அத்தகைய சாதாரண முத்துகள் அல்ல.

இன்று நேற்று எடுக்கப்பட்டவை அல்ல."

"நெடுநாட்களுக்கு முன் எடுக்கப்பட்டதானாலும் தமிழகத்தின் முத்துகள் இவை.

"எப்படித் தெரியும் உமக்கு?"

"இவற்றின் வெண்மையிலிருந்து கதிரவன் கதிர்களோ, விளக்கின் சுடரொளியோ படும்போது வைரங்கள் போல் மாறுவதிலிருந்து.

"இதைக் கேட்டதும் மீண்டும் தனது கைகளை நோக்கினான் கோட்டைத் தலைவன். கதிரவன் ஒளியில் அந்த முத்துகளின் பிரகாசம் ஆயிரம் மடங்கு உயர்ந்திருந்தது. உண்மைதான் உண்மைதான்" என்று தனக்குத் தானே பைத்தியக்காரன் போல் சொல்லிக்கொண்ட கோட்டைத் தலைவன், "இந்த முத்துகள் பாலித் தீவிலிருந்தன?" என்றான் இளையபல்லவனை நோக்கி.

"ஆம்" என்பதற்கு அறிகுறியாக தலையசைத்தான் இளைய பல்லவன்.

"இவை எப்படி உமக்குக் கிடைத்தன ?"

"பாலி மன்னர் கொடுத்தார்.

"தாமாகவா?"

"ஆம்.

"இதை நான் நம்பவில்லை." கோட்டைத் தலைவன் முத்துகளைக் கைகளில் இறுகப் பிடித்த வண்ணம் ஆசனத்திலிருந்து எழுந்து இளைய பல்லவனை நன்றாக ஏறிட்டு நோக்கிவிட்டுச் சொன்னான் "இந்த முத்துகளைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்.

"நீங்கள் முத்துகளை ஆராய்ந்த போதே புரிந்து கொண்டேன்." என்று இளையபல்லவன் ஆமோதித்தான். "இவை பாலி அரசர்களின் குடும்ப தனம்," என்று சுட்டிக் காட்டினான் கோட்டைத் தலைவன். "ஆம்".

"இவற்றை அவரிடமிருந்து விலைக்கு வாங்கப் பல அரசர்கள் முனைந்தார்கள். "அப்படித்தான் கேள்வி. "ஆனால் பாலி மன்னர்கள் கொடுக்கவில்லை. "அதுவும் கேள்வி உண்டு.

"உமக்கு மட்டும் ஏன் கொடுத்தார்கள்?"

"இப்பொழுது பாலியிலுள்ள மன்னருக்கு யாரும் செய்ய முடியாத உதவியைச் செய்தேன்.

"கோட்டைத் தலைவன் முகத்தில் கேள்விக்குறி பலமாக எழுந்து நின்றது. "கொள்ளைக்காரன் என்ன உதவியைச் செய்ய முடியும் அரசருக்கு?"

"மற்றவர்கள் செய்யமுடியாத உதவியைக் கொள்ளைக்காரன் செய்ய முடியும். கொள்ளைக்காரன் செய்ய முடியாத உதவியை மற்ற யாரும் செய்ய முடியாது." என்று புதிர் போட்ட இளையபல்லவன் மெல்ல நகைக்கவும் செய்தான்.

"அத்தகைய பெரும் உதவிதான் என்ன?" என்று கேட்ட கோட்டைத் தலைவனின் குரலில் சந்தேகம் துளிர்த்தது.

இளையபல்லவன் அந்தச் சந்தேகத்தைக் கவனித்தான். ஆனாலும் கவனிக்காதவன் போல், "தலைவரே! உமது இந்தக் கோட்டை பாழாக்கப்படாமலும் உமது குடும்பப் பெண்கள் பலாத்காரப்படுத்தப் படாமலும் பாதுகாக்க என்ன கொடுப்பீர்கள்?" என்று கேட்டான்.

"எதையும் கொடுப்பேன்." விநாடி நேரத்தில் எழுந்தது கோட்டைத் தலைவன் பதில்.

"அப்படிக் கொடுக்கப்பட்ட முத்துகள் இவை." என்று விடையிறுத்த இளையபல்லவன் ஒரு விநாடி ஏதோ சிந்தித்துவிட்டு, "தலைவரே! பாலித்தீவு அகூதாவின் கொள்ளைக் கூட்டத்தால் தாக்கப்பட்டதை அறிவீர்களல்லவா?" என்று வினவினான்.

"ஆம் அறிவேன்." என்றான் கோட்டைத் தலைவன்.

"அந்தத் தாக்குதலை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்தவன் நான். அதற்காக அகூதா தமது பெரும் போர்க் கப்பல்களில் ஒன்றை எனக்கு வெகுமானமாகக் கொடுத்தார். அகூதாவின் கொள்ளைக்காரர்கள் பாலித் தலைநகரில் புகுந்து கொள்ளையடித்துச் சூறையாடிப் பெண்களை நாசம் செய்ய முற்பட்டார்கள். என்னிட மிருந்த வீரர்களைக் கொண்டு அந்த பாதகச் செயல்களை நிறுத்தனேன். கொள்ளைக் கூட்டம் சூழ்ந்திருந்த அரண்மனைக்குள் புகுந்து மன்னரையும் அவர் குடும்பத்தையும் காப்பாற்றினேன். அவருக்கும் அகூதாவுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தத்தையும் முடித்து, கொள்ளைக்காரரைக் கட்டுப்பாட்டுடன் பாலியிலிருந்து வெளியேற்றினேன். தமது குடும்பத்தையும் நகரத்தையும் சீரழிவதிலிருந்து காப்பாற்றியதற்காகப் பாலி மன்னர் இந்த முத்துகளைப் பரிசாக அளித்தார்." என்று இளையபல்லவன் முத்துகள் தனது கைக்கு வந்த வரலாற்றை விவரித்தான்.

அவன் பேச்சைக் கேட்கக் கேட்கப் பெரும் வியப்பாயிருந்தது கோட்டைத் தலைவனுக்கு. "நகரங்களைச் சூறையாடலிலிருந்து காப்பாற்றுவதும், மன்னர் குடும்பத்தையும், பெண்களையும் மானபங்கத்திலிருந்து காப்பதும் கொள்ளைக்காரன் செய்கையாக இல்லையே?" என்று உள்ளுக்குள் எண்ணமிட்ட கோட்டைத் தலைவன், "நீர் கொள்ளைக்காரரா, அரசாங்கக் கடற்படைத் தளபதியா?" என்று வெளிப்படையாகக் கேட்கவும் செய்தான்.

"இரண்டுமாக இருக்க உத்தேசிக்கிறேன்,"என்று இளையபல்லவன் பதில் கூறினான்.

இதைக் கேட்டதும் வியப்புடன் விழிகளை உயர்த்திய கோட்டைத் தலைவன், "அதெப்படி முடியும் இளைய பல்லவரே! அரசாங்கங்களின் கடற்படை, சில கட்டுப்பாடுகளுக்கும் நீதி வரம்புகளுக்கும் உட்பட்டது. கொள்ளைப் படை அத்தகைய வரம்புகளுக்கு உட்படாதது." என்று விளக்கினான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதற்கும் துணிந்தவன் திரை விமர்சனம்

"எதற்கும் துணிந்தவன்" என்ற தலைப்பைப் பார்த்ததுமே ஒரு அதிரடியான ஆக்ஷன் படம் அல்லது அழுத்தமான எமோஷனல் படம் ஆக இருக்கலாம் என்ற ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. படத்தின் ரைலரைப் பார்த்த பின் அது கொஞ்சம் கூடுதலாகவும் ஆனது. ஆனால், படத்தைப் பார்த்த பின் ஒரு நல்ல தலைப்பை இப்படி வீணடித்து விட்டார்களே என்ற ஏக்கம்தான் வருகிறது.

"சூரரைப் போற்று, ஜெய் பீம்" என சூர்யா நடித்து வெளிவந்த படங்கள் அவர் மீதான ரசிகர்களின் பார்வையை நிறையவே மாற்றியது. சூர்யா வேறு ஒரு தளத்திற்குச் சென்று விட்டார் என்றுதான் நினைக்கத் தோன்றியது. ஆனால், இந்தப் படத்தில் அவரை மீண்டும் கமர்ஷியல் பக்கம் கீழிறக்கி விட்டாரோ இயக்குனர் பாண்டிராஜ் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

இந்த சமூக வலைத்தள, யு டியூப் காலத்தில் பெண்களின் ஆபாச வீடியோக்கள் பரவிய பொள்ளாச்சி சம்பவம் தான் படத்தின் மையக் கரு. அதை வைத்து சென்டிமென்ட் டுடன் ஒரு ஆக்ஷன் படத்தைக் கொடுத்திருக்கிறார் இயக்குனர் பாண்டிராஜ். அந்த ஆக்ஷனில்தான் அழுத்தமும் குறைவு, எமோஷனலும் குறைவு. கதாபாத்திரங்களை சரியாக உருவாக்காததே அதற்குக் காரணம்.

குறிப்பாக வில்லன் வினய் கதாபாத்திரம். மத்திய அமைச்சரின் மகனான வினய், ஒரு கிராமத்தில் இருந்து கொண்டு எதற்காக இதையெல்லாம் செய்கிறார் என்பது விளக்கமாக சொல்லப்படவில்லை. அதுவே, படத்தை நாம் ஒன்றிப் பார்க்கவிடாமல் செய்துவிடுகிறது. கடந்த வருடம் வெளிவந்த "டாக்டர்" படத்தில்தான் வினய் இது போன்ற ஒரு வில்லன் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். அதையே திரும்பவும் பார்ப்பது போல் உள்ளது.

வட நாடு, தென்னாடு என்று இரண்டு பகுதிகளில் அமைந்துள்ள சில கிராமங்கள். தென்னாட்டு கிராமங்களில் இருந்து வடநாட்டிற்குப் பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பார்கள். ஆனால், பெண்ணின் ஒரு தற்கொலையால் இரண்டு பகுதி கிராமங்களுக்கும் தீராத பகை. தென்னாடு பகுதி கிராமத்து இளைஞர் வக்கீல் சூர்யா, வடநாடு பகுதி பெண்ணான பிரியங்காவைக் காதலித்து திருமணம் செய்து கொள்கிறார். அது ஒரு புறமிருக்க, தென்னாடு பகுதிப் பெண்களை ஏமாற்றி ஆபாச வீடியோ எடுத்து அவர்களை பெரிய மனிதர்களுக்கு இரையாக்குகிறார் மத்திய அமைச்சர் மகன் வினய். இது சூர்யாவுக்குத் தெரிய வர, அதன் பின் என்ன நடக்கும் என்பது அனைவருக்குமே தெரிந்த ஒன்றுதான்.

வேட்டி கட்டினால் இறங்கி அடிக்கும் வீரன் சூர்யா, கோட் போட்டால் வாதாடி ஜெயிக்கும் சூரன் சூர்யா என்று சொல்ல ஆசைதான். ஆனால், மனைவியின் ஆபாச வீடியோவையே வில்லன் எடுக்கும் அளவிற்கு கோட்டை விடுகிறார். அடுத்து வில்லனின் சூழ்ச்சியால் கோர்ட்டிலும் வெற்றி பெற முடியாமல் சிறைக்கும் செல்கிறார்.

ஒரு ஹீரோ வின் கதாபாத்திரத்தில் இப்படி ஒரு தடுமாற்றம் இருந்தாலும் தன் நடிப்பால் தனது கதாபாத்திரத்தை எப்படியோ கரை சேர்க்கிறார் சூர்யா. பிரச்சினை வந்தால் பெண்கள் எப்படி சமாளிக்க வேண்டும் என்று பேசும் சில வசனங்களில் மட்டும் கைத்தட்டல் வாங்கிவிடுகிறார்.

படத்தின் ஆரம்பக் காட்சிகளில் நேரம் போவது தெரியாமல் தன் காதல் நடிப்பில் கரை சேர வைப்பவர் பிரியங்கா மோகன். அந்தக் கண்ணும், குறும்பான பார்வையும் தமிழுக்கு இன்னொரு ரேவதி கிடைத்துவிட்டார் என்று சொல்ல வைக்கிறது. கீப் இட் அப் பிரியங்கா.

படத்தில் வில்லன் வினய்யை விடவும் அதிகக் காட்சிகளில் வருபவர்கள் சூர்யாவின் பெற்றோர் சத்யராஜ், சரண்யா. சில பல சுவாரசிய காட்சிகளில் இருவரும் போட்டி போட்டு நடித்திருக்கிறார்கள். பிரியங்காவின் பெற்றோர்களாக இளவரசு, தேவதர்ஷினி, சில காட்சிகள் தான் என்றாலும் சிரிக்க வைக்கிறார்கள். படத்தில் சூரியும் இருக்கிறார் என்பதுடன் அவரது கதாபாத்திரம் இருக்கிறது.

இமான் பின்னணி இசையில் எப்படியோ சமாளித்துவிடுகிறார். ஆனால், பாடல்களில் ஏமாற்றி விட்டார். "சும்மா சுர்ருன்னு.." பாடல் மட்டும் கொஞ்சமாக ஆட்டம் போட வைக்கிறது. மற்ற பாடல்கள் பரவாயில்லை . "உள்ளம் உருகுதையா" பாடலில் ரசிகர்கள் சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

பெண்களின் பாதுகாப்புக்காக "காவலன் எஸ்ஓஎஸ்" என்ற மொபைல் ஆப் இருக்கிறது என்பது இந்தப் படம் மூலம் பலருக்குத் தெரிய வரும். பெண்களின் மொபைல்களில் டிக்டாக், இன்ஸ்டாகிராம் இருப்பதை விட இந்த ஆப் இருக்க வேண்டும் என்ற காட்சியும், அதை படத்தில் சரியான நேரத்திலும் பயன்படுத்தியிருப்பதும் பாராட்டுக்குரியது.

பெண்களின் கொடுமைக்கு எதிராக பொங்கி எழும் ஒரு ஹீரோயிசப் படம். இது போல பல ஹீரோயிசப் படங்களைப் பார்த்துவிட்டோம். சூர்யா படம் என்பதால் அது வித்தியாசமாக சொல்லப்பட்டிருக்கலாம் என்ற எதிர்பார்ப்புதான் ஏமாற்றத்தை அளித்துவிட்டது. வழக்கமான ஒரு கமர்ஷியல் படத்தை சுமாராகத் தந்திருக்கிறார் பாண்டிராஜ்.

## ஐஸ்வர்யா ரஜினிகாந்தை நெகிழ்ந்து பேசிய பிரபு தேவா



ஐஸ்வர்யா-தனுஷ் திருமணம் உறவு முறிந்த பிறகு, ஐஸ்வர்யா தனது இயக்குனர் வேலையில் ஆர்வம் காட்டுவதாக சினிமா வட்டாரத்தில் பேசப்பட்டது. அதன்படி ஐஸ்வர்யா தனது "பயணி" மியூசிக் ஆல்பம் வீடியோ வேலைகளை ஆரம்பித்துள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தார். இதற்கான பணிகள் ஹைதராபாத்தில் அவர் தொடங்கியிருந்தார். தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி என நான்கு மொழிகளில் இப்பாடல் உருவாகியுள்ளது. அன்கித் திவாரி இசையமைத்துள்ள இப்பாடலை தமிழில் அனிருத், மலையாளத்தில் ரஞ்சித் கோவிந்த், தெலுங்கில் சாகர், இந்தியில் அன்கித் திவாரி என இசை கலைஞர்கள் பாடியுள்ளனர்.

இப்பாடல் விரைவில் வெளியாகவுள்ள நிலையில் சினிமா பிரபலங்கள் ரசிகர்கள் எனப் பலரும் ஐஸ்வர்யா ரஜினி காந்தை பாராட்டி வருகின்றனர். அந்த வகையில் நடன இயக்குனரும், நடிகருமான பிரபுதேவா ஐஸ்வர்யா ரஜினி காந்தை வாழ்த்தி, நெகிழ்ந்து பேசிய வீடியோ வெளியிட்டுள்ளார். இந்த வீடியோ சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

## சமந்தா தொடங்கிய புதிய பிசினஸ்



தற்போதைய பிரபல நடிகைகளில் நயன்தாரா, அனுஷ்கா உள்ளிட்ட பலர் பல்வேறு தொழில்களில் முதலீடு செய்து வரும் நிலையில், ஹைதராபாத்தில் மழலையர் பள்ளி ஒன்றை நடத்தி வரும் சமந்தா, சாதி என்கிற ஆடை வடிவமைப்பு நிறுவனமும் நடத்தி வருகிறார். இந்த நிலையில் தற்போது தனது தோழி ஷில்பா ரெட்டி என்பவருடன் இணைந்து சஸ்டெயின் கார்ட் என்ற ஒரு நிறுவனத்தை தொடங்கி இருக்கிறார்.

ஆன்லைன் மூலமும் ஆர்கானிக் பொருட்களை விற்பனை செய்வதற்கு தொடங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி அழகு சாதன பொருட்களையும் இதில் ஆர்டர் செய்து பெற்றுக்கொள்ள முடியும். இதை விளம்பரப்படுத்தும் வகையில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார் சமந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : ஞான ஒளி
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



ஆஆ..ஆ..ஆஅஆஅஆஅ..ஆ.ஆ..

தேவனே என்னை பாருங்கள்
என் பாவங்கள் தம்மை
வாங்கிக் கொள்ளுங்கள்
தேவனே என்னை...
ஆயிரம் நன்மை தீமைகள்
நாங்கள் செய்கின்றோம்
நீங்கள் அறிவீர் மன்னித்தருள்வீர்

ஓ மை லார்ட் பார்டன் மீ

உங்கள் மந்தையில் இருந்து
இரண்டு ஆடுகள்
வேறு வேறு பாதையில் போய் விட்டன
இரண்டும் சந்தித்த போது
பேச முடியவில்லையே

தாய் மடியிலே மழலைகள் ஊமையோ
சேய் உறவிலும் நினைவுகள் மௌனமோ
நோய் உடலிலா மனதிலா தேவனே
நான் அழுவதா சிரிப்பதா கர்தரே..ஓ

மான்களும் சொந்தம் தேடுமே
இம் மானிடன் செய்த பாவம் என்னவோ
காவலே சட்ட வேலியே உன் பார்வையில்
பிள்ளை பாசம் இல்லையோ

செல்வங்கள் குவிந்தது
மாளிகை வந்தது
சேவை புரிந்திட சேவகர் ஆயிரம்
தேடிக் கொண்டாடிட நண்பர்கள் வந்தனர்
ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும்

நோ பீஸ் ஆஃப் மைண்ட்
ஆஆ..ஆ..ஆஅஆஅஆஅ..ஆ.ஆ..
தேவனே என்னை...

ஆஆ..ஆ..ஆஅஆஅஆஅ..ஆ.ஆ..

கேள் தருகிறேன் என்றதே நீரன்றோ
நான் பல முறை கேட்கிறேன் தரவில்லை
என் கருணையே திறக்குமா சன்னிதி
என் கர்தரே கிடைக்குமா நிம்மதிஓ

ஓ லார்ட் ப்ளீஸ் ஆன்ஸர் மை ப்ரேயர்

கண்களில் கண்ணீர் இல்லையே
இந்த உள்ளமும் இதை தாங்கவில்லையே
கொண்டு வா இல்லை கொண்டு போ
உன் கோவிலில் வந்து சேவை செய்கின்றேன்

முள்ளை வளைத்தொரு மகுடம் அணிந்ததும்
ஆணி அடித்தொரு சிலுவையில் அறைந்ததும்
அன்று நடந்தது ஆவி துடித்தது
இன்று நடப்பது நெஞ்சு துடிக்குது


ஆஆ..ஆ..ஆஅஆஅ
ஆஅ.ஆஆஅ..ஆ.ஆ..
தேவனே என்னை...

# எங்கே செல்லும் இந்தப் பாதை...

**“ பொருட்களின் விலையேற்றம் உலக நாடுகளில் எங்கும் இல்லாதவாறு எகிறிக் கொண்டு செல்கின்றது. போகும் நிலையைப் பார்த்தால் இலங்கை கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதியப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ”**

நாட்டின் பொருளாதா ரம் எங்கு போய்க் கொண்டிருக்கின்றது என்பதற்கு விடை இந்த நாட்டை ஆளும் ஆட்சியாளர்களிடமே இல்லை என்பது தான் உண்மையானது. அவ்வளவிற்கு பொருளாதாரம் கைமீறிய காளையைப் போல தாறுமாறாகப் போய்க் கொண்டிருக்கிறது.

அரசாங்கத்திடம் டொலர் இல்லை என்பது சாதாரண கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தும் பாமரனின் வீட்டில் இன்று சமைப்பதற்கு பணம் இல்லை என்றது போல் ஆகிவிட்டது. அந்தளவிற்கு வங்குரோத்து நிலையில் அரசாங்கம் சென்று கொண்டிருக்கிறது.



பொருட்களின் விலை என்றுமில்லாத அளவு எகிறி இருக்கிறது. எரிபொருளின் விலை தடல்புடலாய் ஏற்றப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போது உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறுவதற்கான முயற்சியோ இது என்று எண்ணத் தோன்றுகிறது.

அபிவிருத்தி, தன்னிறைவு பொருளாதாரம், சரியான திட்டமிடல் என்பன இல்லாததன் விளைவே இது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இது உண்மையாயினும் இலங்கை ஆட்சியாளர்கள் சர்வதேசத்தை உதாசீனம் செய்ததன் விளைவும் இதற்குக் காரணம் என்பதை நாம் இங்கு கவனித்தே ஆக வேண்டும். ஒரு பாரிய இன அழிப்புப் போரை நடத்தியிருக்கிறது இலங்கை. அந்த இன அழிப்பிற்கு நீதி வேண்டி பாதிக்கப்பட்ட தமிழினம் இன்றுவரை போராடிக் கொண்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு நீதி வழங்குங்கள் என்று சர்வதேசம் குரல் கொடுத்தாலும் அதை உதாசீனம் செய்து இங்கு உங்களுக்கு (சர்வதேசத்திற்கு) வேலை இல்லை என்று திமிர்க்கதை பேசுகிறார்கள் ஆட்சியாளர்கள். இதுவும் தற்போதைய நெருக்கடி நிலைக்குக் காரணமாக அமையலாம்.

தற்போதுள்ள நெருக்கடி நிலையினை மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பதை நினைக்கும் போது நெஞ்சம் வெடிக்கிறது.

பெற்றோல், டீசல் விலை ஏற்றம் கொஞ்சநஞ்ச ஏற்றமல்ல. இவ்வளவிற்கு விலை ஏற்றப்பட்ட பின்னரும் எந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் எரிபொருள் இல்லை என்ற வாசகத்தையே காணக்கூடியதாக இருக்கின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் உத்தியோகபூர்வ முகப்புத்தகத் தளத்தில் இலங்கையின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அங்கு வேலை செய்யும் ஊழியர்கள் கிரிக்கெட் விளையாடுவது போன்ற புகைப்படத்தை பதிவிட்டிருந்தது. இதனூடாக இலங்கையின் தற்போதைய நிலை சர்வதேச அளவில் பேசு படுபொருளாகி விட்டதை உணர முடிகின்றது.

இரண்டு இளைஞர்கள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல ஆடல் பாடல் நிகழ்வை சுவாரஷ்யமாக ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போது திடீரென அந்த தொலைக்காட்சியில் ஆட்சியாளர்கள் தோன்றுகிறார்கள். அடுத்தகணமே ஆத்திரமுற்ற இளைஞர்கள் ஒரு பொல்லை எடுத்து அந்த தொலைக்காட்சிப் பெட்டியை ஆவேசத்துடன் அடித்து நொருக்கி விடுகிறார்கள். இது சமூக வலைத்தளத்தில் வைரலான ஒரு காணொளியாயினும் இதற்குள் இந்த நாட்டு மக்களின் மனநிலை மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்போது இலங்கைத் திருநாடு சென்று கொண்டிருக்கும் பாதையானது மீளத் திரும்ப முடியாத பாதை. இந்தப் பாதையின் பயணம் தொடருமாக இருந்தால் பல்லாயிரம் உயிர்கள் பட்டினியால் சாகும் என்பது நிதர்சனமானது.

**இந்திரபுத்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெட்ரா (ஜோர்டான்)



கி.பி.1812 ஆம் ஆண்டு வரை இப்படி ஒரு நகரம் இருந்ததே மேற்கத்திய நாடுகளுக்குத் தெரியாது.

சுவிட்சர்லாந்து தொல்பொருள் ஆய்வாளர் ஜோஹன்னன் லுட்விக் புர்காடிட் என்பவர் பிரிட்டிஷ் புவியியல் கழக ஆய்வு மையம் அளித்த பொருளாதார உதவியுடன் எகிப்து மற்றும் அரேபியத் தேசங்களில் மேற்கொண்ட தொல்பொருள் ஆய்வுகளின் பலனாக பெட்ரா நகரம் வெளி உலகுக்கு தெரிய வந்தது.

அவரது குழுவினரின் அயராத முயற்சியில் பதினைந்து சதவித நகரப்பகுதிகளை மட்டுமே பூமியிலிருந்து மீட்டெடுக்க முடிந்தது. இன்னமும் 85 சதவிகித நகரம் மண்ணுக்குள்ளேயே மறைந்து கிடக்கிறது.

அமெரிக்க ஆய்வுக்குழு ஒன்று இன்றைக்கும் கூட ஜோர்டான் தலைநகர் அம்மானில் இருந்தபடி பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. லுட்விக் ஒரு சுற்றுலாப் பிரியர். சரித்திரப் பெருமை வாய்ந்த டமாஸ்கஸ் லெபனான் எபிர்து மற்றும் அரேபியாவின் பல சிறிய தேசங்களைச் சுற்றி வந்தவர்.

உண்மையில் நைல் நதியின் மூலத்தை அடைந்து அதன் ஆற்றுப்படுகைகளில் பல்வேறு ஆய்வுகளில் ஈடுபடும் நோக்கில் தான் அவர் தனது புதிய பயணத்தைத் தொடங்கினார்.

ஆனால் எதிர்பாராத விதமாக ஜோர்டானில் புதைந்து கிடந்த பிரம்மாண்டமான கருவூலமான அல் கேசினேவை கண்டுபிடித்தார். அதற்குப்பிறகும் கூட அவருக்கு நைல் நதி ஆய்வுகளின் மீதுதான் மிகுந்த ஈர்ப்பு இருந்தது. ஆனால் அவரது நைல் நதிப் பயணம் அவர் எதிர்பார்த்தபடி அத்தனை வெற்றிகரமாக அமையவில்லை.

எனவே அவர் நீண்ட காலத்துக்குப் பிறகு மறுபடியும் ஜோர்டான் வந்து பெட்ரா நகரின் சில பகுதிகளை தேடி வெளிக் கொணர்ந்தார்.

கி.மு 550 களில் பெர்சியன்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த ரெகிம் (இதனுடைய அர்த்தமும் பாறை என்பது தான்) என்றழைக்கப்பட்ட பிரதேசத்தில் வட அரேபியாவிலிருந்து குடியேறிய நாடோடி வம்சத்தினர் தான் நபாட்டியான்கள்.

கி.மு. 435 க்குள் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமித்த நபாட்டியான்கள் பெட்ரா என்ற புதிய பெயரிட்டு ரெகிம் பகுதியை ஆளத்தொடங்கினர். கி.மு. 400 க்கும் கி.பி. 106 க்கும் இடைப்பட்ட 500 ஆண்டுகளாக நபாட்டியன்களின் தலைநகராக விளங்கி வந்த பெட்ராவில் வாழ்ந்து வந்த மக்கள் பல்வேறு தெய்வங்களை வணங்கி வந்தனர்.

அவர்களது காலத்தில் கட்டப்பட்டிருந்த ஆலயங்களில் அவர்கள் வணங்கி வந்த அல் அஸி மற்றும் துஷாரா ஆகிய கடவுள்களை பிரதிபலிக்கும் விதமாக சிலைகள், தூண்கள் கட்டப்பட்டிருக்கின்றன. துஷாரா கடவுளை போற்றி வணங்கும் துஷாரி பண்டிகை கொண்டாடப்பட்டிருக்கிறது.

அவர்களது ஆலயங்களுக்கு அல்டெயிர் என்று பெயரிடப் பட்டிருக்கிறது. கி.பி 106 ல் கிறிஸ்துவ போதகர்கள் வந்த பிறகு கிறிஸ்தவ மதம் பரவத் தொடங்கியது.

(தொடரும்....)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2532

**பிரணவன்**

கணவன்: அடியேய், மரியாதையா கிரிக்கெட் மேட்ச் போடு...
மனைவி: முடியாது, என்ன பண்ணுவே??
கணவன் : பாத்துக்கிறேன்..
மனைவி: என்ன பாத்துக்கிறேன்???



கணவன்: நீ எந்த சேனலை போடுறியோ அந்த சேனலை பாத்துக்கிறேன்.

**காயத்திரி**



அவள் கடந்து வந்த பாதையின் அழகான கால்கள்..

**தர்சன்**

என்ன வாழ்க்கை ரொம்ப கஷ்டம்மா இருக்கா கவலைப்படாத தை பிறந்தால் வழிபிறக்கும்



இத தான்டா போன வருஷமும் சொன்ன

**சரண்யா**

அம்மா: டேய் பொண்ணு வீட்ல உன் போட்டோ கேக்குறாங்க எதையாவது அனுப்பு
மகன்: சரிமா அனுப்புறன்




**நிக்சிகன்**




இரண்டு கால் நாயே
குளத்தில் குப்பையை கொட்டாதே

**மேனஷா**



புதைந்த பிறகே "விதையும்"
சிதைந்த பிறகே "மனமும்"
புதிய கோணம் காண்கிறது.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

282

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## கேள்வி பதில் ....

**எமது தலை முறையினர் முந்திய தலைமுறையிலும் பார்க்க அடிக்கடி நோய் வாய்ப்பட காரணம் என்ன?**

இதற்கு பல காரணங்களைச் சொல்ல முடியும். இயற்கையின் கூர்பியல் தத்துவத்தின் படி இயற்கையின் தாக்கங்களிற்கு தாக்குப் பிடிக்கக் கூடிய உடல் வலிமையுள்ள உயிரினாங்களே தப்பிப் பிழைத்து வாழும். மற்றவை தமது வாழ்க்கையின் ஆரம்ப பகுதியிலேயே இறந்து விடும்.

முன்னைய காலத்திலே மருத்துவவசதிகள் போதாமை காரணத்தால் உடல் வலிமை குறைந்த குழந்தைகள் சிறு வயதிலேயே இறப்பைச் சந்தித்தன. இவற்றிலிருந்து தப்பிப் பிழைத்த வலிமையான குழந்தைகள் ஆரோக்கியமாக நீண்டகாலம் வாழ்ந்தன. இவர்களையே நாம் அன்று சந்தித்தோம். ஆனால் தற்பொழுது மருத்துவ வசதிகள் முன்னேற்றம் கண்டிருப்பதால் ஆரோக்கியம் குறைவாக இருக்கும் குழந்தைகள் உட்பட ஏறத்தாழ அனைவரும் காப்பாற்றப்படுகிறார்கள்.

இதனால் இவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுவது இயற்கையே. அத்துடன் தற்போதைய சந்ததியினரின் ஆரோக்கிய மற்ற உணவுமுறையும் போதிய உடற்பயிற்சியின்மையும் கூட எமது சந்ததியினர் அடிக்கடி நோய்வாய்ப்பட காரணமாக அமைகிறது. எமது சந்ததியினர் உடலில் தோன்றும் இயற்கையான தாமாகவே மாறக்கூடிய அறிகுறிகளைக் கூட பெரிதுபடுத்தி நோயென்று கருதி மருந்து எடுக்க முற்படுகின்றனர். இதுவும் நோய் நிலைகள் அதிகரித்திருப்பது போன்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்துகின்றது.

**நான் 73 வயதுடைய பெண். நான்கு வருடங்களுக்கு முன்பு நெஞ்சில் ஓரளவு வலி ஏற்பட்ட போது மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டேன். இதயத்தில் ஒரு பகுதி தடித்துள்ளதாகவும் ஒரு** Silent Attack **ஏற்பட்டுள்ளதாகவும் அத்துடன் குருதி அமுக்கம், கொலஸ்ரோல் உள்ளதாகவும் கூறி மருந்துகள் தந்தனர். அந்த மருந்துகள் வாழ்நாள் பூராகவும் பாவிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. மருந்துகள்** Atenolol 50mg. Atovastatin 10mg. Ecos prin 75mg.Clopidogrel 75 mg. **கடந்த நான்கு வருடங்களாகத் தினமும் இவற்றைப் பாவித்து வருகிறேன். இடைக்கிடை தனியார் வைத்தியசாலையில் பரிசோதித்தபோது எல்லாம்** Normal **என்று கூறினார்கள். நான் உண்ணும் உணவில் உப்பு, கொழுப்பு குறைத்து காய்கறி, பழங்களை அதிகம் சாப்பிட்டு சுகமாக இருக்கிறேன். தொடர்ந்தும் இந்த மருந்துகளைப் பாவிக்க வேண்டுமா? அல்லது நிறுத்தலாமா?**

உங்களுக்கு உயர் குருதிய முக்கம், இருதயத்திற் கான இரத்தக் குழாய்களில் கொலஸ்ரோல் படிவு மற்றும் இரத்தத்தில் அதிகரித்த கொலஸ்ரோல் ஆகிய நோய் நிலைகள் இருப்பதை உங்கள் கடிதத்தின் மூலம் அறிய முடிகின்றது. நீண்ட காலமாக மருத்துவத்துறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வுகள், நீங்கள் தொடர்ந்தும் Aspirin (Ecospirin), Atorvastatin மற்றும் Atenolol ஆகிய மருந்துகளை உள்ளெடுப்பது உங்களுக்கு எதிர்காலத்தில் இந் நோய்களால் ஏற்படும் ஆபத்துக்களைக் குறைக்கும் என்பதை நிரூபித்து இருக்கின்றன.

இவை உங்களுக்கு மீண்டும் ஒரு மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்ற இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க உதவும். இது உங்கள் ஆயுட்காலத்தை அதிகரிக்கும். நீங்கள் உள்ளெடுக்கும் Clopidogrel என்னும் மருந்தை வைத்தியருடன் கலந்தாலோசித்த பின் நிறுத்த முடியும்.

**சீனிக்குப் பதிலாக பாவிக்கப்படும் இனிப் பூட்டிகள் பாதுகாப்பானவையா?**

இவை மிகவும் இனிப்பான பதார்த்தங்களாக இருந்த பொழுதும், இவற்றுக்கு குருதிகுளுக்கோசின் அளவை அதிகரிக்கும் தன்மையோ அல்லது உடல் நிறையை அதிகரிக்கும் தன்மையோ இல்லை. அத்துடன் இவற்றுக்கு இரத்தத்திலே, அல்லது உடலிலோ கொழுப்பின் அளவை அதிகரிக்கும் தன்மை கூட இல்லை. சீனி, சர்க்கரை போன்ற இனிப்பு வகைகளைப் பாவித்தால் பற்களில் பாதிப்புகள் ஏற்படலாம் என்பது அனைவருக்கும் தெரியும். அத்தகைய பாதிப்புகள் செயற்கை வகையான இந்த இனிப் பூட்டிகள் பாவிப்பதால் ஏற்பட மாட்டாது.

இந்த இனிப் பூட்டிகளின் பாவனையால் ஏதாவது ஆபத்து நிகழுமா? அல்லது உடற் பாதிப்புகள் ஏற்படுமா? என்பது சம்பந்தமாக செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் அளவுடன் இவற்றை பாவிப்பது பாதுகாப்பானது என்பதை உறுதி செய்திருக்கின்றன. அள வுக்கு அதிகமாக எந்த உணவையும் உண்பது பாதுகாப்பானதல்ல என்பதையும் மனதில் கொள்ள வேண்டும் .

பாயாசம், தேநீர், ஐஸ்கிறீம் வகைகள் மோதகம் போன்றவற்றுக்கும் இந்த இனிப்பூட்டிகளைப் பாவிக்க முடியும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் மட்டு மல்ல குடும்பத்தில் எந்த நோய் உள்ளவர்களும் அதிகரித்த நிறை உள்ளவர்களும் நிறை அதிகரிப்பை தடுக்க விரும்புவர்களும் சீனி, சர்க்கரைக்கு பதிலாக இந்த இனிப் பூட்டிகளைப் பாவிப்பது பாதுகாப்பானது.

**பயிரிடப்படும் ஒவ்வொரு புகையிலைச் செடியும் யாரோ ஒரு மனிதனை நோயாளியாக்கு மல்லவா?**

கஞ்சாச் செடி வளர்ப்பது தண்டனைக் குரிய குற்றம் என்பது எம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் பல இலட்சம் மக்களைப் பாதித்து நிற்கும் புகையிலைச் செடியை வளர்ப்பது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுவதில்லை.

பயிரிடப்படும் ஒவ்வொரு புகையிலைச் செடியும் யாரோ ஒரு மனிதனை நோயாளியாக்கும். இதே விளை நிலத்தில் ஒரு மரக்கறியைப் பயிரிட்டால் அது யாரோ ஒரு மனிதனை வாழவைக்கும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org